

# திட்ட செயலாக்கக் கையேடு


## தமிழ்நாடு அறக்கட்டளை

27, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை—600 010.



# ABC திட்டம்
# செயலாக்கக் கையேடு

தமிழ்நாடு அறக்கட்டளை
27, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.



# அணிந்துரை

**வணக்கம்,**

ஏபிசி திட்டம் என்பது தமிழ்நாடு அறக்கட்டளையின் முதன்மைத் திட்டம். மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்து அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இத்திட்டம் 2011ல் சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. 9 பள்ளிகளில் ஆரம்பித்து தற்போது 62 பள்ளிகளில் உள்ள ஆறாயிரத்து அறுநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

பல வருடங்களாக வெற்றிகரமாக நடந்து வரும் திட்டத்தை மேலும் மேம்படுத்த இந்த ABC கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ABC திட்டத்தின் நோக்கம், ஆசிரியர் தேர்வு, வகுப்பு மாணவர்கள் தேர்வு, பாடங்கள் கற்பிக்கும் முறை, வகுப்பு செயல்பாடுகள், தேர்வு முறை முதலிய பல பகுதிகளை நுணுக்கமாக விளக்குகிறது இந்தக் கையேடு. ஆசிரியர்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள், மாணவர்களின் உடல், மனநலம்குறித்துக்கவனம் செலுத்தல் ஆகியவையும், மென்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, உயர் கல்வி சுற்றுலா போன்ற இதர செயல்பாடுகளும் விவரமாக விளக்கப்பட்டிருக்கின்றன. **ABC** திட்டத்தைச் செம்மையாக நடத்த இந்தக் கையேடு மிகவும் உதவியாக இருக்குமென நம்புகிறேன்.

இந்த கையேட்டை முன்னின்று தயாரித்த முனைவர் க.இளங்கோ, திருமதி வசுமதி பென்னி இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. சொல், பொருள் பிழைகளைத் திருத்தி திட்டத்தின் சாரம் உள்ளதா என்றும் திருத்தி உதவிய முனைவர் சோமலெ சோமசுந்தரம் (**ABC** திட்டத்தை ஆரம்பித்தவர்) அவர்களுக்கும், இந்தக் கையேட்டைப்பதிப்பிக்க ஊக்குவித்த திரு.சி.ராஜரத்தினம் இ.ஆ.ப (ஓய்வு) அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

**ABC திட்ட ஆசிரியர்களே,**

உங்கள் திறனால் மாணவர்களை முன்னேற்றுவது உங்கள் தலையாய கடமை. இந்த கையேட்டினை நன்கு பயன் படுத்தி நீங்கள் உங்கள் கற்பிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் மாணவர்கள் பள்ளிப் படிப்பைச் செவ்வனே முடித்து, கல்லூரி, தொழில் துறை என மேன்மேலும் வளர உதவுங்கள்.

நீங்கள் யாவரும் போற்றும் தலை சிறந்த ஆசிரியர்களாக இருக்க எனது அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

**உஷா சந்திரா**
தலைவர்
தமிழ்நாடு அறக்கட்டளை யு.எஸ்.ஏ.
president@tnfusa.org



# வாழ்த்துரை

அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்து வாழ்வில் மேன்மை அடைந்தவர்களைக் காணும்பொழுது, இன்றைக்குத் தங்கள் பிள்ளைகள் தனியார்ப்பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி கற்க வேண்டும் என பல பெற்றோர்கள் எண்ணுவதால் திறமையான ஆசிரியர்கள் மற்றும் நல்ல கட்டமைப்பு வசதிகளுடைய அரசுப்பள்ளிகளில்கூட ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை குறைந்து வருவது வருத்தமளிக்கக்கூடியதாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் மெல்லக்கற்கும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து, கற்கும் திறன் உயர்த்தும் திட்டம் Academic Bridge Course (ABC) சிவகங்கை மாவட்டக்கல்வி அலுவலர்களின் ஒத்துழைப்புடன் அம்மாவட்டத்தில் உள்ள 9 அரசுப் பள்ளிகளில் 2011 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், அறக்கட்டளை நியமித்த ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் திறன் அறிந்து அதற்கேற்றாற்போல் கற்பித்ததன் மூலம் மாணவர்கள் கல்வி கற்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கடந்த 10 ஆண்டுகளில் ABC திட்டம் அமெரிக்கவாழ் தமிழர்களின் உற்சாக ஒத்துழைப்புடன் ஆண்டுதோறும் விரிவாக்கப்பட்டு, தற்பொழுது 2019-2020 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் உள்ள 62 அரசுப்பள்ளிகளில் 79 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு 6602 மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ABC திட்டத்தை முதலில் சிவகங்கை மாவட்டத்தில் அறிமுகப்படுத்திய முனைவர் சோமலெ. சோமசுந்தரம் மற்றும் அலுவலர்களின் சேவை பாராட்டுக்குரியதாகும்.

அமெரிக்க வாழ் தமிழர்கள், தமிழகத்தின் கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முனைப்புடன் ஆர்வம் காட்டுவதால், “மண்வாசனை” என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிரந்தர வைப்பு நிதி (Corpus Fund); வைக்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்கள் மற்றும் பாண்டிச்சேரி பகுதிக்கு உட்பட்ட பள்ளிகளில் ABC திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைக் கவனத்தில் கொண்டு ABC திட்டச் செயல்பாட்டு வழிமுறைகள் கையேடு திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆசிரியர்கள் பணிகள் பற்றிய விரிவான குறிப்புகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கையேடு முழுமையான தகவலுடன் உரிய நேரத்தில் வெளியிடுவதற்கு முழுமுதற்காரணமாக இருந்த முதன்மைச் செயல் அலுவலர் முனைவர் க.இளங்கோ மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய அறக்கட்டளை அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். தேவையான திருத்தங்களைச் செய்து, இக்கையேடு அழகுத் தமிழில் வெளிவர உதவிட்ட மேனாள் மாவட்டக் கல்வி அலுவலர் திரு.முத்துவாவாசி, வடிவமைத்த திருமதி சித்ரா பாஸ்கர், எக்ஸ் பேஃக்ட்டர் இன்னோவேஷன்ஸ் (X Factor Innovations) மற்றும் அச்சிட்டு வழங்கிய திரு.S.செல்லப்பன், பி.எம்.டிஜிட்டல் ப்ராடக்ட்ஸ் (P.M. Digital Products) அனைவருக்கும் நன்றி. இக்கையேடு திட்டப் பணியாளர்களுக்கும் ஆய்வு அலுவலர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

இந்தக் கையேட்டிற்கு அணிந்துரை அளித்து உற்சாகப்படுத்தியுள்ள அமெரிக்காவில் உள்ள தமிழ்நாடு அறக்கட்டளையின் தலைவர் திருமதி உஷா சந்திரா, முன்னாள் தலைவர் முனைவர் சோமலெ. சோமசுந்தரம் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**எஸ். ராஜரெத்தினம்**
தலைவர்
தமிழ்நாடு அறக்கட்டளை சென்னை



# வாழ்த்துரை

பிறந்த பொன்னாட்டை நன்றி உணர்வோடு நினைக்கின்ற அமெரிக்கத் தமிழர்களின் சரணாலயம் தமிழ்நாடு அறக்கட்டளை TNF -USA. 1974-ல் அமெரிக்கா வாழ் நான்கு தமிழ் குடும்பங்களால் துவங்கப் பெற்று, அமெரிக்காவிலும், தமிழகத்திலும் ஒரு ஆலமரமாக வளர்ந்து வருகின்ற உன்னதமான இந்தத் தன்னார்வலர் சேவை அமைப்பின் மூலம் கடந்த 46 ஆண்டுளில் பல லட்சக்கணக்கான தமிழர்கள் பயன் பெற்றுள்ளனர்.

கல்வி, மகளிர் மேம்பாடு, கிராமப்புற முன்னேற்றம், நல்வாழ்வு மற்றும் சுகாதாரம் ஆகிய நான்கு இன்றியமையாத சமுதாயத் தேவைகளைத் தன்னுடைய நான்கு தூண்களாக அமைத்துக்கொண்டு தொண்டாற்றி வருகின்ற TNF, 2008-ஆம் ஆண்டு பிட்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற மாநாட்டில் திரட்டிய நிதியைத் தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த முடிவு செய்தது.

நூற்றுக்கணக்கானோர் வழங்கிய நன்கொடைகளை அங்குமிங்குமாய் ஆற்றில் கலந்த பால் போல் பல திட்டங்களில் செலவிடாமல், பள்ளிக் கல்வியை மையமாகக் கொண்டு ஒரு திட்டத்தினை உருவாக்க வித்திட்டவர் TNF இன் அன்றைய தலைவர் மருத்துவர் பழனிச்சாமி. தரமான பள்ளிக் கல்வியே வளமான வாழ்விற்கு அடித்தளம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன், **“களஞ்சியம்”** என்ற தன்னார்வலர் அமைப்பின் மூலம் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் பகுதியில் 2008-2010 கல்வி ஆண்டுகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தினை அரசோடு இணைந்து உயர்த்தக் காலூன்றியது TNF.

Experience is the best Teacher என்ற ஜூலியஸ் சீசர் சொற்படி, அந்த முதல் முயற்சியில் கிடைத்த அனுபவத்தின் வாயிலாக 2010-ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரில் நடைபெற்ற TNF மாநாட்டில் திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு, 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் TNF-ABC திட்டம் தொடங்கப்பட்டது. என்னுடன், அன்றைய சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.விஷ்ணுபிரசாத், மாவட்டக் கல்வி அலுவலர் திரு.சுவாமிநாதன், TNF செயல் இயக்குநர் திருமதி மன்மதா தேவி ஆகியோர் உட்பட்ட குழு, ஒரு வாரம் முழுவதும் பல பட்டி தொட்டிகளில் உள்ள நூற்றுக்கணக்கான அரசுப் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களைச் சந்தித்து, கலந்துரையாடல்கள் நடத்தியது. அவற்றின் விளைவாக, TNF தமிழ்நாடு கிளை முனைவர் ஏ.எம்.சுவாமிநாதன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, 2012 பிப்ரவரியில் துவக்கிய ஏபிசி திட்டம் இன்று தமிழகத்தின் பல மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆண்டுதோறும் வளர்ந்து வரும் இத்திட்டத்தைச் செம்மைப் படுத்தி வரும் TNF தமிழ்நாடு கிளை தலைவர் திரு.S. ராஜரெத்தினம் இ.ஆ.ப. (ஓய்வு) மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் முனைவர் க.இளங்கோ ஆகியோரின் நன் முயற்சியே இந்த மிகவும் பயனுள்ள ABC திட்டத்தின் செயலாக்கக் கையேடு.

TNF திட்டத்தோடு தொடர்புள்ள அனைவரும் இக்கையேட்டை முறையாகத் தொடர்ந்து பயன்படுத்தினால் அதுவே அமெரிக்கத் தமிழரின் ஈகைப் பண்பிற்கு அவர்கள் செலுத்தும் சிறந்த நன்றியாக அமையும்.

ABC திட்டத்தின் தொடர் வெற்றி உங்கள் கைகளில்....!

நல்வாழ்த்துக்களுடன்,

S. Somasundaram

**சோமலெ சோமசுந்தரம்**

மேனாள் தலைவர், TNF USA

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | ABC திட்டம் அறிமுகம் | 1 |
| 2. | ABC திட்டம் என்றால் என்ன? | 2 |
| 3. | பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் | 4 |
| 4. | ABC திட்டப் பள்ளிகள் தேர்வுமுறை | 6 |
| 5. | ABC - வகுப்பு மாணவர்கள் தேர்வு முறை | 8 |
| 6. | TNF – ABC திட்ட வகுப்பு – ஒரு மலர்த்தோட்டம் | 12 |
| 7. | ABC வகுப்பின் செயல்பாடுகள் | 15 |
| 8. | மெல்லக் கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் (Monitoring) | 16 |
| 9. | TNF திட்ட ஆசிரியரின் இதர செயல்பாட்டு முறைகள் | 18 |
| 10. | ஆசிரியர் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் | 20 |
| 11. | பயிற்சிகள் | 23 |
| 12. | திட்ட ஒருங்கிணைப்பாளர் பணிச்செயல்பாடுகள் | 24 |
| 13. | இதர பணிகள் | 28 |



# 1. ABC திட்டம் அறிமுகம்

இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போல் பெரிதுவந்து-மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்(கு)
அடையாவாம் ஆண்டைக் கதவு.

**செல்வம் நிறைந்த காலத்தில் மட்டும் அல்லாமல், அது குறைந்த காலத்திலும், இல்லாதவர்களுக்கு இயன்றவரை ஈதல் உயர்ந்த குணம்! அவர் புகழை – பெருமையைத் தடுத்து அடைக்கும் கதவு எங்கும் இல்லை.**

-என்கிறது நாலடியார் பாடல், இப்பாடலுக்கு ஏற்ப ஈன்றெடுத்த தாய் மண்ணிற்கு இயன்ற வரை உதவிகள் செய்திட வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள அமெரிக்க நாடுவாழ் தமிழர்கள், தமிழ்நாடு அறக்கட்டளை (TAMILNADU FOUNDATION – TNF) என்னும் அமைப்பை 1974-ஆம் ஆண்டில் உருவாக்கியுள்ளனர்.

இந்த அறக்கட்டளை ஆற்றும் நற்பணிகள் பல. அவற்றுள் தமிழகத்தில் அரசுப்பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவ மாணவியரின் கல்வித் தரம் உயர உதவிட வேண்டுமென எண்ணியது அவர்களின் நல்லுள்ளம்! அரசுப்பள்ளிகள் பெரும்பாலும் ஏழைக் குடும்பப்பிள்ளைகள் பயிலும் பள்ளிகள் அல்லவா! அதன் பயனாக, தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல்திறன்கள், அவர்கள் கல்விகற்றலுக்குத் துணையாக அமைந்துள்ள சூழ்நிலைகள். படிப்பைத் தொடராமல் இடையில் நிற்கும் மாணவர்கள் எண்ணிக்கை, அவர்களின் சுகாதார நிலை, அவர்களின் குடும்பப் பொருளாதார நிலை, அவர்கள் ஊக்கமுடன் கற்க உதவும் பள்ளியின் கட்டமைப்பு வசதிகள் முதலியவை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

ஆய்வுகள் தந்த முடிவுகளின் தொடர்ச்சியாக அரசுப் பள்ளிகளின் மாணவர்களுடைய கற்றல் திறன்களை மேம்படுத்தவும், அந்த மாணவர்கள் பெறும் கல்வியை வளப்படுத்தவும் கருதினர். அதற்காக அந்த அமெரிக்க வாழ் தமிழர்கள் அருள் நெஞ்சத்தோடு ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். அந்தத் திட்டம் தான் TNF – ABC என்னும் திட்டமாகும்.

# 2. ABC திட்டம் என்றால் என்ன?



பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் பல திறத்தினர் உண்டு, அவர்களுள் மெல்லக்கற்கும் மாணவர்கள் (SLOW LEARNING STUDENTS) ஒரு வகையினர். மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்திட ஓர் ஏணியாய் – அவர்களையும் கரை சேர்க்கும் ஓடமாய், 'கரம் கொடுப்போம்! கரை சேர்ப்போம், எனும் குறிக்கோளுடன் (MOTTO) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது "ABC திட்டம்" அதன் விளக்கம்:

A - ACHIEVING GRADE LEVEL PROFICIENCY
(தரமான கல்வியின் உயர் நிலையில் முழுமையடைதல்)

B – BOOSTING THE MORALE
(கல்வி தரும் நற்பண்புகளைப் பயிற்சிகளால் வளர்த்து மேம்படுத்துதல்)

C - CHAMPIONING FOR HIGHER ASPIRATION
(உயர்கல்வியிலும், வேலைவாய்ப்புத் திறன்களிலும் ஆர்வம் கொண்டு முதன்மை பெறச்செய்தல்)



## இத்திட்டத்தின் நோக்கம்:–

### TNF-ABC- திட்டத்தின் மூன்று அம்சங்கள்

1. A - Achieving Grade Level by Proficiency Uplifting the "Slow Learners" ஆறாம் வகுப்பில் தொடங்கி ஒன்பதாம் வகுப்பு வரையில் உள்ள மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் தர நிலையை முழுமையடையச் செய்தல்.

2. B - Boosting the Morale
10–ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்குத் தேவையான



| | |
|---|---|
| கவனிக்கும் திறன் | - Concentration |
| தன்னம்பிக்கை | - Self Confidence |
| நேர மேலாண்மை | - Time Management |
| நினைவாற்றல் திறன் | - Memory Capacity |
| குறிக்கோள் நிர்ணயித்தல் கடின உழைப்பு மற்றும் விரைந்து முடித்தல் | - Goal Setting, Hard work and Smart Work |
| தன்னொழுக்கம் | - Self Discipline |
| ஊக்கப்படுத்துதல் | - Motivation |
| உடற்பயிற்சி | - Physical Exercise |
| சேமிப்பு | - Savings |
| வேலைவாய்ப்புப் பெற வழிகாட்டுதல் | - Career Guidance |
| அரசுப் பொதுத் தேர்வுக்குத் தயார் செய்தல், வினாக்களுக்கு ஏற்ப விடையெழுதுதல் | - How to prepare in the Public Exam, Exam paper Presentation |




| | | |
|---|---|---|
| தன்னிலை அறிதல் மற்றும் மனித உறவுகள் மேம்பாடு | – | Weakness and Strength Analysis Human Relations |

என்ற நிலையில் மாணவர்களுக்குச் சிறந்த வாழ்வியல் பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கி அழகு சிற்பங்களாக ஒவ்வொரு மாணவரையும் வடிவமைத்தல்.


3. C- Championing for Higher Aspirations மேல்நிலைக்கல்வி முதலாமாண்டு (+1 Students) உயர்கல்வி நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று உயர்கல்விக்கான வழிகாட்டல், அங்கு உயர்கல்வி பயிலும் மாணவர்களையும் கல்லூரிப் பேராசிரியர்களையும் சந்தித்தல் – ஒவ்வொரு துறை குறித்தும் முழு தகவல்கள் அறியச் செய்தல், வேலைவாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல், பணி நியமனம் பெற துணை புரிதல், கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் முறை, உதவித்தொகை வசதிகள் (Career Guidance, Job Placement, College Application Process, Scholarships) போன்று மேலும் பல விவரங்களை நேரடியாக அறிந்து தன்னம்பிக்கை பெற மாணவர்களுக்கு வழிகாட்டல்.

# 3. பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு அறக்கட்டளை, இந்த நோக்கங்களுடன் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் தரமான கல்வி கிடைக்க வாய்ப்புகளை, வசதிகளை ஏற்படுத்தித்-தருவதற்காக, தமிழகப்பள்ளிக் கல்வித்துறையின் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ஆகியோரைச் சந்தித்து மெல்லக்கற்போர் விரைந்து கற்க உதவும் ABC திட்டத்தின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தது, அத்திட்டத்தை அரசுப்பள்ளிகளில் நிறைவேற்றிட அனுமதி கோரியது. அவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றிட இசைவளித்ததன் அடிப்படையில், தமிழ்நாடு அறக்கட்டளை, பள்ளிக்கல்வித் துறையோடு 2010 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது **(Annexure 1 & 2)**.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் தொடர்ச்சியாக, ABC திட்டத்தைச் செயல்படுத்திட முதற்கட்டமாக சிவகங்கை மாவட்டத்தைத் தமிழ்நாடு அறக்கட்டளை தேர்வு செய்தது. அதன்படி, அம்மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் பரிந்துரைத்த பள்ளிகளைப் பரிசீலனை செய்து, அவற்றுள் 9 அரசுப் பள்ளிகளில் தமிழ்நாடு அறக்கட்டளையின் பிலடெல்பியா கிளை நிதியுதவியுடன் 2012 ஆம் ஆண்டில் ABC திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக இத்திட்டம் வேறு பல மாவட்டகளுக்கும் நீட்டிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தபட்டு வருகிறது.

கடந்த 2019 - 2020 ஆம் கல்வியாண்டில் 15 மாவட்டங்களில் உள்ள 62 பள்ளிகளில் 6602 மாணவர்கள் இத்திட்டத்தின் வாயிலாகப் பயன் பெற்றுள்ளனர். இது நாள் வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும் விவரம்:



| வரிசை எண் | மாவட்டம் | திட்டம் தொடங்கிய ஆண்டு | பள்ளிகளின் எண்ணிக்கை | நிதியுதவி |
|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை | 2011 | 10 | பிலடெல்பியா பிரிவு |
| 2 | வேலூர் (தற்போது இராணிப்பேட்டை மாவட்டம்) | 2013 | 3 | அட்லாண்டா பிரிவு டர்போ எனர்ஜி பிரைவேட் லிமிடெட் |
| | | | 2 | நியூயார்க் பிரிவு |
| 3 | கடலூர் | 2014 | 5 | சிகாகோ பிரிவு |
| 4 | நாமக்கல் | 2015 | 9 | மிக்சிகன் பிரிவு<br>நியூயார்க் பிரிவு<br>டாக்டர் ராம்மோகன் |
| 5 | திருவாரூர் | 2016 | 6 | ஹூஸ்டன் பிரிவு<br>கிரேட்டர் பாஸ்டன் பிரிவு |
| 6 | நாகப்பட்டினம் | 2016 | 5 | சென்ட்ரல் ஓகியா / தெற்கு புளோரிடா பிரிவு |
| 7 | மயிலாடுதுறை | 2016 | 1 | திருமதி மாலதி பழனியப்பன் குடும்பத்தினர் |
| 8 | திருநெல்வேலி | 2016 | 1 | வாஷிங்டன் DC பிரிவு |
| 9 | தூத்துக்குடி | 2016 | 6 | வாஷிங்டன் DC பிரிவு |
| 10 | தென்காசி | 2016 | 4 | வாஷிங்டன் DC பிரிவு |
| 11 | சென்னை | 2019 | 2 | சான்பிரான்சிஸ்கோ பேஏரியா பிரிவு |
| 12 | சேலம் | 2019 | 3 | தெற்கு புளோரிடா பிரிவு |
| 13 | இராமநாதபுரம் | 2019 | 1 | மெம்ப்சிஸ் பிரிவு |
| 14 | கரூர் | 2019 | 1 | திருமதி பெரியசாமி கவுண்டர் மற்றும் திருமதி பொன்னம்மாள் குடும்பத்தினர் திட்டம் |
| 15 | கோயம்புத்தூர் | 2019 | 3 | ஆஸ்டின் பிரிவு |




# 4. ABC திட்டப் பள்ளிகள் தேர்வுமுறை

ABC திட்டத்தினைச் செயல்படுத்த அரசுப்பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தமிழ்நாடு அறக்கட்டளை, ABC–திட்டத்தினை எந்த மாவட்டத்தில் செயல்படுத்திட விரும்புகிறதோ அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் மெல்லக்கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள பள்ளிகளின் பட்டியல் பெற்று தமிழ்நாடு அறக்கட்டளையின் அறங்காவலர் குழுவின் ஒப்புதல் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் உதவியுடன் அப்பள்ளிகளில் ABC – திட்டம் செயல்படுத்தப்படும்.

## மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் தேர்வு முறை

தமிழ்நாடு அறக்கட்டளையின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளரே அந்த மாவட்டத்தில் திட்டத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவார். இந்த திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தகுந்த கல்வித்தகுதியும், ஆற்றலும் அனுபவமும் வாய்ந்தவர்களை நேர்காணல் வாயிலாகத் தமிழ்நாடு அறக்கட்டளை தேர்வு செய்து நியமனம் செய்யும்.

## திட்ட வகுப்பாசியர் தேர்வுமுறை

**நேர்காணல்**

**ABC** திட்டம் செயல்படுத்தும் பள்ளி அமைந்துள்ள பகுயிலிருந்து ஒரு இளங்கலை பட்டம், ஆசிரியர் பயிற்சிக்கல்வி ஆகியவற்றை பயின்றவர்களிடம் திட்டம் குறித்து எடுத்துரைத்து, ஆர்வம் உள்ளவர்களிடம் ஆசிரியர்கள் பணிக்காக விண்ணப்பங்கள் பெறவேண்டும். விண்ணப்பங்களைப் பள்ளித் தலைமையாசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், திட்ட ஒருங்கிணைப்பாளர் மூவரும் ஆய்வு செய்திட வேண்டும். அதன் அடிப்படையில் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்வீதம் தேவைப்படும் ஆசிரியர்களைத் தேர்வு செய்திட நேர்காணல் நடைபெறும். திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அறக்கட்டளை முதன்மைச் செயல் அலுவலருக்கு நேர்காணல் மேற்கொண்ட விபரங்களை அறிக்கையாக அனுப்ப வேண்டும்.

### அந்த அறிக்கையுடன் இணைக்கப்படவேண்டியவை;–

1. விண்ணப்பதாரர்களின் வேலை வாய்ப்பு வேண்டிய கோரிக்கை கடிதங்கள் மற்றும் விண்ணப்பதாரர்களின் கல்விச் சான்றிதழ் நகல்கள்.
2. **ABC** திட்டத்தைப் பள்ளியில் நிறைவேற்றிடபெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் அவர்களின் கோரிக்கை கடிதம்.
3. பள்ளித்தலைமை ஆசிரியரின் கோரிக்கை கடிதம்
4. ஒருங்கிணைப்பாளரின் பரிந்துரைக் கடிதம்





கோரிக்கை கடிதங்களைப் பார்வையிட்டு – பரிசீலனை செய்து தமிழ்நாடு அறக்கட்டளையின் முதன்மைச் செயல் அலுவலர் அனுமதி வழங்குவார். இந்த அனுமதி கிடைத்ததும், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் நியமனம் செய்யப்படுவார்கள்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அந்தப் பள்ளித் தலைமையாசிரியரின் வழிகாட்டுதலின்படி, தேர்வு செய்யப்பட்ட மெல்லக்கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தி முழுமை அடையச் செய்வது அவர்களின் முதன்மைப் பணியாகும்.

**<u>ஊக்கத்தொகை</u>**

தேர்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் ஊக்கத் தொகை வழங்கப்படும். தமிழ்நாடு அறக்கட்டளை வழங்கிய விதிகளுக்குட்பட்டு, தமிழ்நாடு அறக்கட்டளை திட்ட ஆசிரியருக்கு மாதாந்திர ஊக்கத்தொகை மற்றும் விடுப்பு வழங்கும் பணிகளைத் தமிழ்நாடு அறக்கட்டளை முதன்மைச் செயல் அலுவலர் அவர்களின் அனுமதியுடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் செயல்படுத்த வேண்டும்.

# 5. ABC - வகுப்பு மாணவர்கள் தேர்வு முறை

கல்வியாண்டு தொடக்கத்தில் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அறக்கட்டளையின் முதன்மைச் செயல் அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று, அவரது மாவட்டத்தில் உள்ள TNF–ABC திட்டப்பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் வகுப்பாசிரியர்களிடம் 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கற்றல் திறன் குறித்துக் கலந்தாய்வு செய்திட வேண்டும். அந்த அடிப்படையில் முறையாக அனுமதி பெற்று TNF – ABC திட்ட ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் இணைந்து மெல்லக்கற்கும் மாணவர்களின் தேர்வு முறையை மேற்கொள்ள வேண்டும்.

கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வகுப்பாசிரியர்களின் துணை கொண்டு அப்பள்ளியில் உள்ள 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களின் கற்றல் திறன்களையும் ஆய்வு செய்து, எந்த ஒரு மெல்லக்கற்கும் மாணவரும் விடுபடாவண்ணம் வாசிப்புத்திறன் தேர்வு மற்றும் முனைப்புத் தேர்வு வைத்து மெல்லக் கற்கும் மாணவர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்திட வேண்டும்.






### வாசிப்புத்திறன் தேர்வு

திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ABC திட்ட ஆசிரியர் இருவரும் அப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்புவரை பயிலும் ஒவ்வொரு மாணவரையும் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களை வாசிக்க வைத்து பின்வரும் கற்றல் திறன் மதிப்பீடு அடிப்படையில் தேர்வுமுறை மேற்கொள்ளல் வேண்டும்.

1. எழுத்துகளை அறியாத நிலை : 1 மதிப்பெண்
2. எழுத்துகளை மட்டும் அறிந்திருத்தல் நிலை : 2 மதிப்பெண்
3. வார்த்தைகள் உருவாக்கும் நிலை : 3 மதிப்பெண்
4. மிதமாக வாசிக்கும் நிலை : 4 மதிப்பெண்
5. மிகச்சரளமாக வாசிப்புத் திறன் நிலை : 5 மதிப்பெண்

மேற்கண்ட மதிப்பீட்டு விதிகள் அடிப்படையில் ஒவ்வொரு மாணவனின் வாசிப்புத் திறனையும் கண்டறிதல் வேண்டும். அதற்காக மொழிப்பாடமான தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகங்களை அளித்து, அதில் உரை நடைப்பகுதியில் ஏதேனும் ஒரு பாடத்தை வாசிக்க வைத்தல் வேண்டும். அவ்வாறு வாசிக்கும் மாணவர் வாசிக்கும் திறன் மதிப்பீட்டால் எந்நிலையில் உள்ளார் என்பனைக் கண்டறிதல் வேண்டும்.



## மொழிப்பாடம் 1. தமிழ்

தமிழ்ப் பாடத்தில் செய்யுள் பகுதி மற்றும் மனப்பாடப் பகுதிகளை மாணவர்கள் செவியால் கேட்டுக்கேட்டுப் பழகி நன்கு ஒப்புவிப்பார்கள். ஏனெனில் அவர்கள் செவி வழிக் கற்றல் திறன் பெற்றதால் அவர்களால் அப்படி ஒப்புவிக்க முடிகிறது. ஆனால், அவர்களால் எழுத்துக் கூட்டிப் படிக்கச் சொன்னால் வாசிக்கும் போது அவர்கள் தடுமாறுவார்கள். அப்படிப்பட்டவர்களிடம் உரைநடைப் பகுதியைக் கொடுத்து வாசிக்கச் சொல்ல வேண்டும். கைவிரல் வைத்துப் படிக்கச் சொல்லிச் சொற்களைச் சரியாக வாசிக்கிறார்களா என்பதைப் பார்த்து வாசிப்புத்திறனை மதிப்பீடு செய்திட வேண்டும்.

## மொழிப்பாடம் 2. ஆங்கிலம்

ஆங்கிலப் பாடத்தினைப் படிக்க முடியாமல் முன்பெல்லாம் நிறைய இடை நிற்றல்கள் ஏற்பட்டதுண்டு. தற்பொழுதும் அப்பாடத்தினை ஒரு வித அச்சத்துடன்தான் கற்கிறார்கள்.மொழித்தாள் தமிழை நன்கு வாசித்த மாணவர் அடுத்ததாக ஆங்கிலப்பாடம் வாசிக்கக் கூறும்போது ஒருவித அமைதியுடன் – தயக்கத்துடன் காணப்படுவார்கள்; அல்லது சில மாணவர்கள் தமக்குத் தமிழ் நன்றாக வாசிக்கத் தெரியும், ஆனால் ஆங்கிலம் வாசிக்கத் தெரியாது என்றும் கூறுவார்கள்.

மேற்கண்ட மாணவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, முதலில் ஒவ்வொரு மாணவனின் ஆங்கிலப் பாட வாசிப்புத் திறனும் எந்நிலையில் உள்ளது என்பதனைக் கண்டறிய வேண்டும். மேலும், ஆங்கிலம் படிக்கத் தயங்கும் மாணவர்களிடம் ABC திட்ட ஆசிரியர் முதலில் ஆர்வத்தைத்தூண்டும் வகையில் பேசி, இனி உங்களாலும் வாசிக்கமுடியும்; உங்களுக்கு நான் உதவுகிறேன் என்று கூறி மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

## கணிதம்

ஒவ்வொரு மாணவரிடமும் அவ்வகுப்புக்குரிய அடிப்படைக் கணக்குகளான கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் கணக்குகளில் இருந்து சில வினாக்களைக் கேட்க வேண்டும். பின் சற்றுப் படிப்படியாக உயர்த்தி வினாக்களைக் கேட்டு கணிதப் பாடத்தில் ஒவ்வொரு மாணவரும் பெற்றுள்ள கற்றல் திறனை மிகத் துல்லியமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.



## முனைப்புத் தேர்வு ( Base Line Test )

அடிப்படைப் பாடத்திட்டத்தினைக் கொண்டு ஒவ்வொரு வகுப்பிற்கும் அவ்வகுப்பில் உள்ள தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களுக்கு வகுப்பு வாரியாக அதாவது 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை தனித் தனி வினாத்தாள்களை TNF ஆசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் இணைந்து தயார் செய்திட வேண்டும். மேலும், இவ்வினாத்தாள்களை வகுப்பாசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்களிடமும் வழங்கி பிழை திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு தயார் செய்யப்பட்ட வினாத்தாள் தொகுப்புகளை அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தமிழ்நாடு அறக்-கட்டளைக்கு அஞ்சல் மற்றும் மின் அஞ்சலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட வினாத்தாள்களைக் கொண்டு முதன்மைச் செயல் அலுவலர், செயல் இயக்குநர் மற்றும் திட்ட அலுவலர் அவர்களைக் கொண்ட குழு பரிசீலனை செய்து ஒரு மாவட்ட வினாத்தாள் தொகுப்பினைத் தேர்வு செய்யும் அவ்வினாத்தாள் தொகுப்பினை அனைத்து மாவட்டத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பி முனைப்புத் தேர்வுக்கு அனுமதி வழங்குவார்கள்.

அவ்வாறு அனுமதிபெறப்பட்ட வினாத்தாள் தொகுப்பினை ஒருங்கிணைப்பாளர்கள் மின்னஞ்சலில் பதிவிறக்கம் செய்து அச்சு எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் தொடக்கத்தில், ஒவ்வொரு பள்ளியிலும் புதிதாய்ச் சேர்ந்த மாணவர்களுக்கு இத்தேர்வு மிகவும் முக்கியமானதாகும். அதாவது 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை புதிதாய்சேர்ந்த மாணவர்களுக்கும் அல்லது வகுப்பாசிரியர்கள் பரிந்துரைக்கும் மாணவர்களுக்கும் இம்முனைப்புத் தேர்வில் 6,7,8,9 ஆம் வகுப்பில் மொத்தம் எத்தனை மாணவர்கள் பங்குகொள்கிறார்கள் என்பதை வகுப்பு வாரியாக விவரமாக பட்டியல் தயார் செய்து கொள்ள வேண்டும்.

அப்பட்டியலில் மொத்த மாணவர் எண்ணிக்கை வகுப்பு வாரியாகக் கிடைக்கும். அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் அச்சிடப்பட வேண்டும். வினாத்தாளிலேயே ஒவ்வொரு மாணவரும் எழுதத்தக்க வகையில் வினாத்தாள்கள் அமைய வேண்டும். அந்த வினாத்தாகளை அச்சிட அல்லது நகல் எடுத்திட ஆகும் செலவு விவரத்தை வகுப்பு வாரியாக அட்டவணைப்படுத்தித் தயார் செய்து அதில் தலைமையாசிரியரின் கையொப்பம் பெறப்பட வேண்டும். அதனை முனைப்புத்தேர்வு நடத்திட அனுமதி கோரும் ஒருங்கிணைப்பாளரின் கடிதத்துடன் TNF முதன்மைச் செயல் அலுவலருக்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

அவ்வாறு அனுப்பப்பட்ட அட்டவணைப் பட்டியலைச் சரிபார்த்த பின்னர் முதன்மைச் செயல் அலுவலரின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியுடன் முனைப்புத் தேர்வு நடத்தும் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

### வினாத்தாள் வடிவமைப்பு:

அ) எழுத்துத் தேர்வு மதிப்பெண் மதிப்பீட்டு முறை.

தமிழ்ப் பாடத்தில் 30 மதிப்பெண்கள், ஆங்கிலப் பாடத்தில் 30 மதிப்பெண்கள் மற்றும் கணக்குப் பாடத்தில் 30 மதிப்பெண்கள் என எழுத்துத் தேர்வு முறையில் மூன்று பாடங்களுக்கும் சேர்த்து மொத்தம் 90 மதிப்பெண்களுக்கு இத்தேர்வு நடத்தப்பட வேண்டும்.



| மாணவர்களின் மதிப்பெண்கள் | தரநிலை |
|---|---|
| 1 முதல் 6 | E |
| 7 முதல் 12 | D |
| 13 முதல் 18 | C |
| 19 முதல் 24 | B |
| 25 முதல் 30 | A |

மாணவர்களின் விடைத்தாள்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்து, அவர்கள் பெறும் மதிப்பெண்களுக்கு ஏற்ப மேற்கண்டவாறு தரநிலை, அதாவது ஒவ்வொரு மாணவரின் கற்றல்திறன் பாடவாரியாக அளவீடு செய்யப்பட வேண்டும்.

**ஆ) வாசிப்புத்திறன் தேர்வு / மதிப்பெண் மதிப்பீட்டு முறை:–**

தமிழ், ஆங்கிலம் தலா 5 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் – 10 மதிப்பெண்கள்

வினாத்தாள்கள் மாணவர்களின் அறிவுக்கூர்மையை ஆய்வு செய்யும் விதமாக இருக்க வேண்டும் :–

**மொத்த மதிப்பெண்கள் தரநிலை அட்டவணை:**

| | | |
|---|---|---|
| எழுத்துத் தேர்வு | – | 90 மதிப்பெண்கள் |
| வாசிப்புத் திறன் தேர்வு | – | 10 மதிப்பெண்கள் |
| மொத்தம் | – | 100 மதிப்பெண்களுக்கு |

மாணவர்களின் கற்றல் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, இதனடிப்படையில் பாட வாரியாக தரநிலை அளவீடு செய்யப்பட வேண்டும்.

| மாணவர்களின் மதிப்பெண்கள் | தரநிலை |
|---|---|
| 1 முதல் 20 | E |
| 21 முதல் 40 | D |
| 41 முதல் 60 | C |
| 61 முதல் 80 | B |
| 81 முதல் 100 | A |

என, ஐந்து வகையாக மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்றவாறு பகுப்பாய்வு செய்து, ஒவ்வொருமாணவரின் கற்றல் திறனையும் துல்லியமாக மற்றும் உறுதியான முறையில் தரநிலை அட்டவணைப் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட தர நிலையில் E மற்றும் D தரநிலை கொண்ட மாணவர்களை மெல்ல மலரும் (கற்கும்) மாணவர்களாகக் கருதிட வேண்டும். அவர்களை TNF முதன்மைச் செயல் அலுவலர் ABC திட்ட ஆசிரியருக்கான விகிதாச்சார 25:1 அடிப்படையில் தரநிலை மாணவர்களாக உயர்த்திடும் சேர்க்கைக்கு அனுமதி வழங்குவார்.

## TNF திட்டம் விகிதாச்சாரம்

| மாணவர்: ஆசிரியர் | 25:1 |
|---|---|

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் அடிப்படையில், TNF – ABC திட்ட ஆசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் இருவரும் தலைமையாசிரியர் அவர்களிடம் முதன்மைச் செயல் அலுவலர் அனுமதி விவரத்தினை எடுத்துரைத்து, மெல்லக் கற்கும் மாணவர்களின் விவரங்களைத் தலைமை–யாசிரியரிடமும் சமர்ப்பித்து, பள்ளித் தலைமை–யாசிரியரின் வழிகாட்டுதல் பேரிலும் மற்றும் வகுப்பு ஆசிரியர்களின் ஆலோசனைகள் பேரிலும் தமிழ்நாடு அறக்கட்டளை வழங்கிய ABC திட்டக் கொள்கைகளின்படி ABC வகுப்புகளைத் திட்ட ஆசிரியர் எடுத்து நடத்திட வேண்டும்.



# 6. TNF – ABC திட்ட வகுப்பு – ஒரு மலர்த்தோட்டம்

மாணவர்களின் மனநிலை, குடும்பச் சூழ்நிலை மற்றும் அவர்களின் உடல் நலம் அறிந்து அம்மாணவர்களின் எண்ணங்களைச் சீர்படுத்தி, கற்றல் மீது ஆர்வத்தை உருவாக்குவது **ABC** திட்ட ஆசிரியருக்குத் தேவையான சிறந்த கற்பித்தல் திறனாகும்.

எத்தகைய சூழ்நிலையில் இருப்பவருக்கும் எத்தகைய எதிர்மறைகளுக்கும் ஒரு மென்மையான மனம் என்பது உண்டு. அதனை மையப்படுத்திச் செய்யப்படுகிற முயற்சி தோற்கவே தோற்காது. பலவான்களிடமும் எதிர் நின்று பெறுவதை விட அவர்களோடு உடன் சென்று பெறுவதே அறிவுடைமையாகும். இது நாலடியாரில் கூறியுள்ள கருத்து.

**ABC** ஆசிரியரின் **TNF** திட்டக் கொள்கையில் தெளிவும், செயலில் உறுதியும் தான் திட்டம் வெற்றி பெறத் தேவையே அன்றி, வாதத் திறமையோ, தோள்வலிமையோ அல்ல, இரும்பு ஆயுதம் வேண்டாம், இளகிய இதயம் போதும். அழகாக மெல்லமலரும் பூக்களை (மாணவர்களை) பூத்துக்குலுங்கும் அழகிய பூந்தோட்டம் போல் கற்றல்திறன் அடைந்த சிறந்த மாணவர்களாக உருவாக்கலாம்.

## திட்ட ஆசிரியரின் முதன்மைப்பணி:–

ஆசிரியர் பணியே தம் அறப்பணி
அதற்கே உம்மை அர்ப்பணி

என்னும் வரிகளுக்கிணங்க ஆசிரியர் பணியைப் போறத்தக்க வழியில் கற்பித்தல் பணியினை ஓர் பணியாகக் கருதாது ஓர் சிறந்த சமுதாய மாற்றத்தை உருவாக்கும் வல்லமை படைத்த அறப்பணியாக, தொண்டாகக் கருதி தன்னொழுக்கம், பொறுப்புணர்வு உணர்ந்து மெல்லக் கற்கும் மாணவர்களை கல்வியிலும், ஒழுக்கத்திலும், மன உறுதியிலும் தேர்ந்த சிறந்த மாணவராக மாற்றம் பெறச்செய்வதே ABC திட்ட ஆசிரியரின் முதன்மைப்பணியாகும்.

ABC திட்ட வகுப்பில் பயிலும் ஒவ்வொரு மாணவரின் எதிர் காலத்திட்டங்கள் பற்றிய கண்ணோட்டத்தை ஒவ்வொரு மாணவருக்கும் முக்கியத்துவம் தந்து அம்மாணவர்களின் வாயிலாக அவர்களின் எண்ணங்கள் அறிதல் வேண்டும். அவ்வெண்ணங்களை எவ்வாறு சிறக்கச்செய்வது அல்லது இலக்கை அடைவது எப்படி என்பதை மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.



இதை எப்படிச் சொன்னால் மாணவரின் ஆர்வத்தினைத் தூண்டும் என்பதை அறிந்து கூறவேண்டும். அம்மாணவர்கள் நாளைய விடியலுக்காக அதிகம் உழைக்கின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் தானாகவே எதுவும் நடந்துவிடும் என்று அவர்கள் இருந்துவிடக்கூடாது.

ABC ஆசிரியர் மாணவர்களுக்குப் புரிகிறவிதத்தில் அவர்களின் ஆர்வத்தினை தூண்டும்விதத்தில் மிக எளிமையாக மேற்கோள்காட்டி விளக்கிச் சொல்ல வேண்டும்.

சிறுகதைகள் மூலமாகவும், இலக்கியங்கள் வாயிலாகவும் மாணவர்களுக்கு ஆர்வத்தை உருவாக்கிவிட்டால் அவர்கள் குன்றின்மேல்இட்ட விளக்கு போல மாறுவார்கள் இதற்கு முதலில் கற்றலின் மீது ஆர்வத்தினைத் தூண்டுவதே முதன்மையானதாகும்.



கொழுந்து விட்டு எரிகிறது அடுப்பு

அதன்மேல் ஒரு பானை
நேரம் ஆகிக் கொண்டே இருக்கிறது...
பானை பொங்குவதாக இல்லை
பார்க்கிறார் ஔவையார்.
அருகே வந்து சொல்கிறார்
அம்மணி.........
பானைக்குள் பால் இல்லையே..
பிறகு எப்படிப் பொங்கும்...?
வெறும் பானை பொங்குமா, பாவையே...?
என்ன அற்புதமான உவமை...!
உள்ளே இருந்தால்தானே, பொங்குவதற்கு...
வினை புரிந்தால்தானே விளைவுகள் தோன்றும்...

என்னும் ஔவையார் கூறிய வரிகளைச் சிந்தையில் ஏற்றி ஒவ்வொரு மாணவர்களின் கற்றல் திறனுக்கும் ஏற்றவாறு எந்தெந்தப் பாடத்தில் மாணவர்கள் பின்தங்கியுள்ளார் என்பதைக் கண்டறிந்து. அப்பாடத்தில் அம்மாணவனுக்கு மேலும் ஆர்வம் ஏற்படுத்தும் விதமாகக் கற்பித்தலை மேம்படுத்தவேண்டும். சிறந்த கற்பித்தல் உபகரணங்கள் கொண்டும் மாணவரின் கற்றல் திறனைத் தூண்டி வளர்க்கலாம். பாடத்திட்டம் அமைத்துக் கற்பித்தல் வேண்டும்.





## மாணவர்களின் தேவைகள்:–

தேவைகளே ஒரு மாணவனைச் செயல்பட வைக்கின்றன

1. உடற்சார்பு தேவைகள்
2. பாதுகாப்பு தேவைகள்
3. அன்பு சார்ந்த தேவைகள்
4. கௌரவம் சார்ந்த தேவைகள்
5. தன்னிலை சார்ந்த தேவைகள்

எனப் பல்வேறு தேவைகள் உள்ளன.

1. மேற்கண்ட தேவைகளைக் கவனத்தில் கொண்டு மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். தூண்டல், துலங்கல் முறையில் கற்பித்தல் மெல்லக் கற்கும் மாணவர்கள் செம்மையாகக் கற்க உதவுகின்றது.

2. ஒரு கற்றல் செயலைக் குறிப்பிட்ட வயதுடைய மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்றவாறு அமைத்துக் கற்பித்து பின்பு அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வாறு கற்றல் செயலை அதிகரிக்க வேண்டும்.

3. உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மன வளர்ச்சி நிலையையும் சிந்தித்துத் தான் கற்பித்தல் வேண்டும். மாணவர்களின் கண்பார்வைத் திறன் மற்றும் கேட்டல் திறன் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். நவீன உள நூல் ஆராய்ச்சியின் படி, கடினமான பாடங்களைக் கூட எளிதாகப் பொருள்படக்கூடிய வடிவங்களில் கற்பித்தலை மேற்கொண்டால் அம்மாணவர்களுக்குக் கற்றல் மீதான ஆர்வம் பெருகும் என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

4. மாணவரின் வயதுக்கேற்ற மனவெழுச்சிகள், வாழ்கின்ற இடத்தின் சுற்றுப்புறச் சூழ் நிலைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் கூட மாணவர் கற்றலில் கவனம் சிதறக் காரணமாக அமைகின்றன. சரியான அணுகுமுறையின்மையால் கூட கற்கும் திறன் பாதித்து மெல்லக்கற்கும் மாணவர்களாக அவர்கள் மாறிவிடக்கூடும்.

5. கற்கும் செயலில் அக்கறை முக்கியமானதாகும் அது கற்றலில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அக்கறை வயதுக்கு வயது மாணவர்களிடம் மாறுபடுகிறது.

6. மாணவர்களிடையே பன்முகச்சிந்தனையை, திறனாய்வுச் சிந்தனையை, கற்பனைத் திறன் வளர்த்–தலை, சிக்கல் தீர்வு மற்றும் ஆக்க சிந்தனைகள் ஆகியவற்றைக் கற்பித்தல் செயலோடு இணைந்து வளர்த்தல் வேண்டும்.

# 7. ABC வகுப்பின் செயல்பாடுகள்

1. TNF –ABC திட்ட ஆசிரியர் உளவியல் அணுகுமுறையோடு கற்பித்தல் வேண்டும். சிறந்த கற்பித்தல் உபகரணங்கள் கொண்டும் கற்பித்தல் வேண்டும் ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறன் குறைபாட்டிற்கு ஏற்ப அம்மாணவர்களுக்குக் கற்றலின் மீதான ஆர்வத்தினை ஏற்படுத்திக் கற்பிக்க வேண்டும். மேன்மேலும் தொடர்ந்து கற்கும் விதமாகக் கற்பித்தலைத் தொடர வேண்டும்.

2. நடக்க நடக்கத்தான் தூரம் குறையும்!
   படிக்க படிக்கத்தான் பார்வை விரியும்!

   இந்த விசாலமான பார்வைதான் தனி விலாசத்தைப் பெற்றுத் தருகிறது. மிகுந்த வளர்ச்சியை ஈட்டித் தருகிறது.

3. மொழிப்பாடங்களை, தமிழ் மற்றும் ஆங்கிலப்பாடங்களில் ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறன் நன்கு அறிந்து அம்மாணவர்களுக்கேற்ப ஓர் எழுத்து, இரண்டு எழுத்து, மூன்று எழுத்து சொற்கள் படிப்படியாக எழுத்துக்களைக் கண்டறிதல் மற்றும் பயிற்சி, வாக்கியம் அமைத்தல், வாசிக்க வாசிப்புத்திறன் பயிற்சி மற்றும் சரளமாக வாசிக்கும் அளவிற்கு மாணவரின் கற்றல் திறனை உயர்த்த வேண்டும்.

4. கணக்கு பாடத்தில் முதலில் எண்கள் அறிமுகம் செய்தல், பின்பு அடிப்படைக் கணிதப் பாட அறிவான கூட்டல், கழித்தல், வகுத்தல் மற்றும் பெருக்கல் போன்ற கணக்குகளில் எளிமையான கணக்குப் பயிற்சி அளித்து, மேலும் படிப்படியாகக் கூடுதல் பாடங்களைக் கற்பித்தல் வேண்டும்.

5. அடிப்படைப் பாட வகுப்புகளுடன் அம்மாணவர்களின் பாடப்புத்தகங்களிலிருந்து எளிய பாடங்களின் பாடத் திட்டங்களைத் தொகுத்துக் கொண்டு ABC திட்ட ஆசிரியர் மாணவர்களுக்கு எளிமையாகப் புரியும் வண்ணம் கற்பிக்க வேண்டும். மாணவர்களிடையே தொடர்ந்து கற்றல் மீது ஆர்வத்தினை ஏற்படுத்த, ஒரே வகையாகக் கற்பித்தல் கூடாது. பலவித கற்பித்தல் முறைகளைக் கையாள வேண்டும்.

### கற்பித்தல் முறைகள்:– (Teaching Methodology)

1. ஒரு தனி மாணவருக்கு அம்மாணவரின் கற்றல் திறனுக்கு ஏற்றவாறு முக்கியத்துவம் அளித்துக் கற்பித்தல்.

2. கற்றல் திறனுக்கு ஏற்றவாறு குழுக்களை அமைத்து, அக்குழுக்களுக்குக் கற்பித்தல்

3. வகுப்பில் மாணவர்களிடையே வினாடி–வினா போன்ற போட்டி விளையாட்டுகள் மூலம் கற்பித்தல்.

4. விளையாட்டு வாயிலாகச் செய்யுள், திருக்குறள், வாய்பாடு மற்றும் மொழிப்பாடங்களில் உள்ள இலக்கிய, இலக்கணப் பாடங்களைக் கற்பித்தல்.

### எடுத்துக்காட்டாக:–

மாணவர்களை வட்ட வடிவில் உட்கார வைத்து ஒரு மாணவன் எழுந்து வாய்பாடு அல்லது மொழிப்பாடங்களில் இருந்து ஏதாவது ஒரு மனப்பாடப் பகுதியை எடுத்து ஒரு பாடலைக் கூறிக்கொண்டே வட்டத்தினைச் சுற்றி வர வேண்டும். இரண்டாம் சுற்றில் இன்னொரு மாணவர் மீது காகித உருண்டையைப் போட வேண்டும். பின்பு அம்மாணவர் கூறிக்கொண்டே வட்டத்தினைச் சுற்றி வரவேண்டும். இது போன்று ஒவ்வொரு மாணவருக்கும் முக்கியத்துவம் அளித்து விளையாட்டு வழிமூலம் கற்பித்தல் மேற்கொள்ளும்போது கடினமான பாடங்களையும் மிக எளிமையாக மாணவர்கள் கற்கும்போது மீண்டும் கற்கும் எண்ணங்கள் தோன்றிச் செயல்களாக உருப்பெற்று வெற்றியடையச் செய்கிறது.



# 8. மெல்லக் கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் (Monitoring)

TNF ABC ஆசிரியர்கள் முக்கியமாக மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பு ஆசிரியருடன் மாதம் தோறும் TNF மாணவர்கள் Regular வகுப்பில் எவ்வாறு பயிலுகின்றனர் என்பதைக் குறித்து கலந்தாய்வு செய்து, அம்மாணவர்களின் நிறை குறைகளை கண்டறிந்து அடுத்த மாதக் கலந்தாய்வுக்குள் சரிப்படுத்தி பின்பு Regular வகுப்பில் எவ்வாறு உள்ளனர் என்பதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

பள்ளிக்கல்வித்துறையின் வட்டாரக் கல்வி மைய மேற்பார்வையாளர்கள் அவ்வப்போது பள்ளிகளுக்கு வருகை புரிந்து பள்ளியில் பயிலும் 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களின் கற்றல் திறன்களையும் பாடவாரியாக (தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு) ஆய்வு செய்து மாணவர்களின் பெயர் வாரியாக - பாடவாரியாக தர நிலையை மதிப்பீடு செய்து, மெல்லக் கற்கும் மாணவர்களின் விவரங்களைத் விரிவாக தலைமையாசிரியரிடம் அளிப்பார்.

TNF-ABC திட்ட வகுப்பு சிறப்புடன் தொடர்ந்து நடைபெறும்போது, அரசின் வட்டாரக்கல்வி மைய மேற்பார்வையாளர் மெல்லக் கற்கும் மாணவர்களை ஆய்வு செய்து மதிப்பிட்டு, அனைத்து மாணவர்களும் நன்கு கற்றல் திறன்களில் முழுமையடைந்துள்ளனரா என்ற தமது மதிப்பீடு விவரத்தைத் தலைமையாசிரியருக்கு அளிக்கும் வண்ணம் TNF-ABC வகுப்பில் திறம்படச் செயல்பட வேண்டும்.

TNF-ABC ஆசிரியர் தினந்தோறும் வகுப்பில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் செயல்பாடுகளை, அவரது தினசரி பதிவேட்டில் தேதி மற்றும் நேரத்துடன் கூடிய தினசரி பணி விவரங்களைப் பதிவு செய்து வருதல் வேண்டும்.

## தேர்வுகள் (Examination)

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தொகுப்புகளிலிருந்து ஒவ்வொரு மாதமும், தினசரி கற்பித்தலிலிருந்து தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களுக்கு TNF தேர்வு விதிகளுக்கு உட்பட்டு வினாக்கள் தயாரித்து TNF –ABC மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு மாதத்தில் 25-ஆம் தேதிக்குள் தேர்வினை வைத்து முடித்தல் வேண்டும்.

அவ்வாறு தேர்வு வைத்த மாத விடைத்தாள்களை மிகத் துல்லியமாக TNF–ABC ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட பாட வாரியான (தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு) மதிப்பெண்களை, TNF–ABC வகுப்பு மாதாந்திர மதிப்பெண் பதிவேட்டில் கீழ்க்கண்ட பட்டியல் முறைகளுக்கு ஏற்ப எழுத்துத்–தேர்வு மதிப்பெண் மற்றும் வாசிப்புத்திறன் மதிப்பெண் விவரங்களைப் பதிவு செய்து அவற்றிலிருந்து மொத்த மதிப்பெண் விவரத்தை மதிப்பீடு செய்து ஒவ்வொரு மாணவரின் அம்மாதத்திற்குரிய கற்றல் தர நிலையை மதிப்பெண் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். **(Annexure -III)**

TNF வழங்கிய தர நிலை மதிப்பீடு விதிக்கு உட்பட்டு மாணவர்களின் பெயர்களை அகரவரிசையில் முறையாக எழுதி மதிப்பெண் பட்டியல் பதிவு செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு பெயர் பதிவு செய்யப்பட்ட விவரப்பட்டியல் (முதல் மாதம்) போன்றே ஒவ்வொரு மாதமும் பெயர்கள் மாறுபடாமல் முறையாகப் பதியப்பட வேண்டும். அடுத்தடுத்த மாதங்களில் மாணவர்களின் பெயர்களை ஆங்காங்கே பெயர் மாற்றம் செய்யக்கூடாது.

எழுத்துத்தேர்வில் மாணவர்கள் பெற்ற (விடைத்தாளில் உள்ள மதிப்பெண்களும் பதிவேட்டில் உள்ள மதிப்பெண்களும் மிகச்சரியாக இருக்க வேண்டும்) மதிப்பெண்கள் TNF திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாணவரிடமும் தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசிப்புத்திறன்களை ஆய்வு மேற்கொண்டு அறிதல் வேண்டும். அவ்வாறு மேற்கொண்ட வாசிப்புத் திறனில் பெற்ற மதிப்பெண்கள் TNF- ABC ஆசிரியர் மதிப்பெண் பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.

Remarks குறிப்பு விவரப்பட்டியலில் TNF திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாணவரின் எழுத்துத் தேர்வு மற்றும் வாசிப்புத்திறன் தேர்வு விவரங்களைக் கொண்டு மதிப்பீடு செய்து Remarks காலத்தில் மாணவரது கற்றல் திறன் குறித்து இறுதி நிலையை மதிப்பீடு செய்து பதிவு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ABC ஆசிரியர் வைக்கும் TNF தேர்வு மாணவர்களின் விடைத்தாள்கள் ஒவ்வொன்றும், மாணவர் முன்னேற்ற ஆய்வுக்கு

மிக முக்கியமானவை; ஆதலால், அவ்விடைத்தாள்களை TNF–ABC திட்ட ஆசிரியர் ஒவ்வொரு மாணவர்க்கெனவும் தனித்தனி கோப்பில் (TNF –ABC) வைக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் விடைத்தாள்கள் மாத வரிசையாக இணைத்து வைக்க வேண்டும். மாணவர் தேர்வு அன்று விடுப்பு எடுத்து இருந்தால் அடுத்த வருகையின்போது தேர்வு வைத்தல் வேண்டும். மாணவர்கள் தொடர் விடுப்பு எடுத்து இருந்தால் அதற்குரிய காரணத்தைப் பெற்று ஒரு தாளில் எழுதி அம்மாணவருடைய கோப்பில் சேர்க்க வேண்டும். இடை நிற்றலோ அல்லது மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) பெற்று இருந்தால் அதற்குரிய காரணத்தைப்பெற்றும், தற்போது மாணவர் நிலை குறித்தும் ஒரு தாளில் எழுதி அம்மாணவரின் கோப்பில் சேர்த்துவைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் தமிழ்நாடு அறக்கட்டளை பற்றிய முழு விவரங்களையும் அறியச்செய்ய வேண்டும் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் அறியும் வண்ணம் TNF வகுப்புக் கையேடுகளில் பெற்றோர் கையொப்பம் பெறச் செய்ய வேண்டும்.

ABC வகுப்பு ஆசிரியர்கள் மாணவர்களது அறிவுத் திறமையை வளர்ப்பதுடன் தத்தமது கல்வியறிவையும் பெருக்கிக் கொண்டு வளம் பெற வேண்டும்.

ABC வகுப்புகளுக்கு இடையூறு அல்லது ABC வகுப்பு மாணவர்கள் தொடர்ந்து வகுப்பிற்கு வரவில்லைஎனில் வகுப்பாசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியரிடம் எடுத்துரைத்து, எவ்விதப் பின்னடைவுமின்றி மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு TNF திட்ட வகுப்புகள் தினந்தோறும் சிறப்பாக நடைபெற ABC ஆசிரியர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

ABC வகுப்பு ஆசிரியர்கள் வகுப்புகளை மேற் கொள்வதில் சிரமங்கள், பிரச்சினைகள் என இருந்தால் திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் கூறி சரி செய்து கொள்ள வேண்டும்.

TNF வழங்கிய இப்பணியினை ஓர் சிறந்த அறப்பணியாகக் கருதி **‘ஒவ்வொரு விதைகளையும் விருட்சமாக்கி சிறந்த படைப்புகள் வழங்க வேண்டும்‘** அவ்வாறு வழங்கும் சிறந்த ஆசிரியர்களை ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தேர்வு செய்து சான்றோர்களின் கரங்களால் சிறப்பு ஆசிரியர் விருது வழங்கிப் போற்றப்படுகிறார்கள்.



# 9. TNF திட்ட ஆசிரியரின் இதர செயல்பாட்டு முறைகள்

### 1. உயர்கல்வி சுற்றுலா :
### (College Exposure Visit)

TNF-ABC திட்டப் பள்ளிகளுக்கு அருகில் உள்ள அரசு அல்லது தனியார் கல்லூரியின் தலைமை நிர்வாகிகளைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தித்து, TNF-ABC திட்ட உயர் நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மாணவர்களையும் மற்றும் மேல் நிலைப்பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களையும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு நேரிடையாக அழைத்துச் சென்று உயர்கல்வி குறித்து ஒவ்வொரு (COURSE) படிப்பு பற்றிய விவரங்களையும் அப்படிப்பிற்குரிய விரிவுரையாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மேலும் ஆய்வகங்களுக்கு மாணவர்களைப் பாதுகாப்புடன் அழைத்துச் சென்று செய்முறை விளக்கம் அளித்து ஒவ்வொரு மாணவரிடமும் உயர்கல்வி மீதான தூண்டுதல், ஆர்வத்தினை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படும் தூண்டுதல் எண்ணங்களாகி, அவ்வெண்ணங்களே மாணவர்களின் உயர்கல்விக்கான ஆசையை தாக்கத்தினை ஏற்படுத்தும்.

### 2. மென்திறன் மேம்பாட்டுப் பயிற்சி
### (Soft Skills Training Program)

TNF-ABC திட்டம் செயல்படும் அரசு உயர் நிலைப்பள்ளி 10-ம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப் பள்ளிகளில் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கும், சிறந்த வாழ்வியல் பயிற்சியாளர்களைக்கொண்டு தமிழ்நாடு அறக்கட்டளை ஒவ்வொரு ஆண்டும் மென்திறன் மேம்பாட்டுப் பயிற்சியை எண்ணற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் அளித்து வருகிறது.

15 தலைப்புகளுக்கு மேற்பட்டு, இரண்டு நாட்கள் மாணவர்களின் வகுப்பறையிலேயே, அவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் எழுது பொருட்கள் அளித்து அவர்களின் எண்ணங்கள், சிந்தனைகள் மற்றும் மன உறுதித் தன்மை போன்ற வாழ்வியல் தன்மைகள் சிறக்க கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

1. Knowing Game, personal details, Strength and Weakness
2. Analysis of Weakness - How to Convert Weakness into Strength
3. Communication Skill
4. Success Formula
5. Confidence Building
6. Savings/ Banking/ Finance
7. Presentation Skill
8. Time Management
9. Concentration/ Listening
10. Health, Hygiene and civic sense
11. Improving Memory
12. Career Guidance / Different Courses & Job Opportunities
13. Goal Setting
14. How to prepare for the Examination
15. Presentation

மேற்கண்ட தலைப்புகள் கொண்ட பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் மென்திறன் பயிற்சிக்கான அனைத்து உபகரணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் சிறப்புடன் முன் கூட்டியே திட்டமிட்டு மாணவர்களிடையே முழுமையாகச் சென்றடையச் செய்ய வேண்டும்.



மேலும் ஒவ்வொரு கல்வியாண்டின் துவக்கத்திலேயே ஆகஸ்ட் மாதத்திற்குள் மென்திறன் பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் அனைத்துப் பள்ளிகளிலும் நடத்திட வேண்டும்.

மெல்லக் கற்கும் மாணவர்களின் நடத்தையில் தோன்றும் மாறுபாடுகளால் அவர்கள் கல்வியை மேற்கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் பின் வருபவை:-

1. அவ்வப்போது விடுப்பு மேற்கொள்ளுதல்
2. தொடர் விடுப்பு (குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வருகை)
3. இடை நிற்றல்
4. முழுமையாகவே பள்ளியை விட்டுச் செல்ல மாற்றுச் சான்றிதழ் பெறுதல்
5. உடல் நல பாதிப்பு - மருத்துவ உதவி தேவைப்படும் மாணவர்கள்

மெல்லக் கற்கும் மாணவர்களிடையே சில மாணவர்கள் தொடர் விடுப்பு மேற்கொண்டு தேர்வு நேரங்கள் அல்லது குறிப்பிட்ட நாட்களில் மட்டும் வருகை புரிதல், வேறு சில மாணவர்கள் குடும்ப இடர்ப்பாடுகள், பொருளாதாரச் சூழ்நிலைகள், உடல் நல பாதிப்பு ஆசிரியரின் கடுமையான அணுகு முறைகள் மற்றும் மாணவர்களிடையே ஏற்படும் கசப்புத் தன்மையான செயல்பாடுகளால் கவனச் சிதறல் ஏறபட்டு; அதன் மூலமாக இடை நிற்றல் உருவாகிறது. மேலும் சில மாணவர்களின் பொருளாதாரச் சூழல் காரணமாக குடும்பம் இடம் பெயர்தல், சில மாணவர்களின் விரும்பத்தகாத செயல்களினால் மற்ற மாணவர்களின் நலன் கருதி நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கை எனப் பல்வேறு பிரச்சினைகளால் மாணவர்களின் கற்றல் திறன்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. மாணவர்களின் நலன் கருதி பள்ளி ஆசிரியர்கள், தலைமையாசிரியர் உதவியுடன் பிரச்சினைக்குரிய மாணவர்களுக்கு முறையான தீர்வு கிடைக்க வழி வகுக்க வேண்டும்.

**கற்க வேண்டிய நேரத்தில் கற்காமல் வீணே கழிந்த நாளும், ஆசிரியரிடம் சென்று பயன் கொள்ளாமல் வீணே கழிந்த நாளும் வாழ்வுதனில் பெரும் இருளை உண்டாக்கும்.**

மேற்காணும் வரிகளை TNF - ABC திட்ட ஆசிரியர் மனதில் வைக்க வேண்டும். ஏனெனில் தமிழ்நாடு அறக்கட்டளை அவர்களுக்கு ஆசிரியர் பணி மட்டும் வழங்கவில்லை; அத்துடன் சேர்த்து, ஒவ்வொரு மாணவரின் கற்றலுக்கு அப்பாற்பட்ட சீரற்ற செயல்களைச் சீர்படுத்தி அவர்களின் கற்றலில் மேன்மையும், செம்மையும் காணச் செய்வதற்கும் அவர்களை எதிர் நோக்கியுள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள TNF – ABC திட்ட ஆசிரியர் தமக்கு வழங்கப்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்களால்தான், தாம் இப்பணியினைப் பெற்றுள்ளோம். என்பதை உணர்ந்து அம்மாணவர்களின் கற்றல் திறன் மற்றும் சிறந்த நற்பண்புகள் வளர்ச்சியடைச் செய்திட வேண்டும்.

அதைவிடுத்து வேறு சில பணிகளில் ஈடுபடுவதோ அல்லது பணியின் மேல் TNF–ABC ஆசிரியர் ஆர்வமின்றி இருப்பதோ கூடாது. அப்படி இருப்பின் உரிய நேரத்தில் உரிய ஆதாரங்களைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அறக்கட்டளைக்கு சமர்பித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

## ஆவணங்கள் ( Documentations)

TNF – ABC திட்ட ஆசிரியர் தாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களையும் பதிவேடுகளில் முறையாகப் பதிவுசெய்ய வேண்டும் மற்றும் ஒவ்வொரு சிறந்த செயல் திட்டங்களையும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துப் பதிவு செய்திட வேண்டும்.





# 10. ஆசிரியர் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்

1. TNF – ABC திட்ட வகுப்பு ஆசிரியர் வருகைப் பதிவேடு.
2. TNF – ABC திட்ட மாணவர் வகுப்பு வருகைப் பதிவேடு
3. TNF மாதாந்திர தேர்வு மதிப்பெண் பதிவேடு
4. TNF – ABC ஆசிரியரின் தினசரி பணிப்பதிவேடு
5. மாணவர் மதிப்பெண் பதிவேடு
6. மாணவர்கள் தொடர் கற்றல் நிலை அல்லது தற்போதைய நிலைப்பதிவேடு
7. தொடர் விடுப்பு, இடை நிற்றல், மாற்றுச் சான்றிதழ் கோரும் மாணவர்கள் விவரப் பதிவேடு
8. மாணவர்களின் மாதாந்திர விடைத்தாள் கோப்பு.

## 1. TNF – ABC வகுப்பு ஆசிரியர் வருகைப் பதிவேடு:–

இப்பதிவேடு பள்ளித் தலைமையாசிரியர் கண்காணிப்பில், அவரது அலுவலகத்தில் இருக்க வேண்டும். ஆசிரியர் தலைமையாசிரியர் முன்னிலையில் தினசரி வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இட வேண்டும். ஆசிரியர் விடுப்பு எடுப்பின் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் அனுமதி பெற்று விடுப்பு எடுத்தல் வேண்டும்.

ABC ஆசிரியர் ஒரு நாள் விடுப்பு எடுக்க திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைமையாசிரியர் அனுமதி மட்டும் போதுமானது. மேலும்,ஒரு நாளுக்கு மேல் விடுப்பு வேண்டுமானால் திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலமாகச் செயல் இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று விடுப்பு வழங்கப்படவேண்டும். அத்தொடர் விடுப்பினைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் வருகைப்பதிவேட்டில் பதிவு செய்து தலைமையாசிரியர் அவர்கள் கையொப்பமிட்டு ABC ஆசிரியர் வருகையினை உறுதி செய்து கண்காணிக்க வேண்டும்.

## 2. TNF – ABC வகுப்பு மாணவர் வருகைப் பதிவேடு:–

ABC வகுப்பு மாணவர்கள் தினசரி பள்ளிக்கு வருவதையும் மற்றும் ABC வகுப்பிற்கு வருகை புரிந்ததையும் TNF – ABC ஆசிரியர் வருகைப்–பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.



ஒரு நாளைக்கு மேற்பட்ட விடுப்பு இருக்குமாயின் அம்மாணவரின் விவரம் தலைமையாசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

## 3. TNF மாதாந்திர தேர்வு மதிப்பெண் பதிவேடு:–

ABC ஆசிரியர் ஒவ்வொரு மாதமும் தாம் பயிற்றுவித்த பாடத்திட்டத்திலிருந்தும் மற்றும் தினசரி பணிப்வேடுகளிலிருந்தும் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் பாடத்திற்கு வினாத்தாள் (30 மதிப்பெண்கள்) தயார் செய்து; மாதம் 25–ம் தேதிகருள் தேர்வு வைத்து; விடைத்தாள் திருத்தம் செய்யப்பட வேண்டும். அம்மதிப்பெண்களை மாணவர்களின் அகர வரிசைக்கேற்பப் பெயர் பதிவுசெய்து அதற்கேற்றாற் போல் விடைத்தாளினை அமைத்து மதிப்பெண்களைப் பதிவு செய்ய வேண்டும். அடுத்து வரும் மாதங்களில் பெயர் வரிசை மாறாமல் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும்.

மதிப்பெண் பட்டியலில் உள்ள வாசிப்புத்திறன் மதிப்பெண்களைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாணவரையும் வாசிக்கவைத்து அம்மாணவரின் திறனை மதிப்பீடு செய்து ABC வகுப்பு ஆசிரியரிடம் வழங்க வேண்டும். அம்மதிப்பெண்களை ABC வகுப்பு ஆசிரியர் வாசிப்புத்திறன் கலத்தில் பதிவு செய்ய வேண்டும்.

மதிப்பெண்கள் பட்டியலில் ஒவ்வொரு வகுப்பில் எத்தனை மாணவர்கள் எந்தெந்த தர வரிசையில் உள்ளனர் என்பதையும் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சேர்த்து A தரவரிசை எத்தனைபேர் B தரவரிசை எத்தனைபேர் என 5 தரவரிசைகளையும் பகுப்பாய்வு செய்து குறிப்பிட வேண்டும்.

அப்பதிவேட்டினை மாதந்தோறும் தலைமையாசிரியரிடம் காண்பித்து கையொப்பம் பெறவேண்டும். ஒவ்வொரு மாதமும் 28-ம் தேதிக்குள் அனைத்து விவரங்களையும் பதிவு செய்து திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் வழங்க வேண்டும்.

### 4. ABC ஆசிரியரின் தினசரி பணிப் பதிவேடு:-

வகுப்பு ஆசிரியர் தினந்தோறும் தான் மேற்கொள்ளும் பணியினை (வகுப்பினை) விவரமாக வகுப்பு, நாள், நேரம், மாணவர்களின் வருகை எண்ணிக்கையுடன் கூடிய விவரங்களைச் சரியான முறையில் பதிவேட்டில் எழுதி வாரத்தின் இறுதி நாளில் தலைமையாசிரியர் அவர்களிடம் காண்பித்துக் கையொப்பம் பெற வேண்டும் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் வருகையின் போது காண்பித்தும் கையொப்பம் பெற வேண்டும்.

### 5. மாணவர் மதிப்பெண் பதிவேடு:-

ABC வகுப்பு மாணவர்களின் ஒவ்வொரு மாத TNF, மாதாந்திர எழுத்துத் தேர்வு மதிப்பெண் மற்றும் வாசிப்புத் திறன் மதிப்பெண்களை முறையாக மதிப்பீடு செய்து திட்ட ஒருங்கிணைப்பாளர் தன்னுடைய மாணவர் மதிப்பெண் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட மாணவரின் மதிப்பெண்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் அந்தந்த வகுப்புகளில் மாணவர்களின் முன்னேற்ற விவரம் (தர நிலை முழுமை அடைவு விவரத்தினையும்) (Move to Regular Class) மற்றும் Consolidated Report விவரத்தினையும் தயார் செய்து ஒவ்வொரு மாதமும் அனுப்புதல் வேண்டும்.

கல்வியாண்டு இறுதிக்குள் ஒவ்வொரு ஆசிரியரின் வகுப்பு மாணவர்களின் ABC தரநிலை முழுமை அடைவு விழுக்காடு (Move to Regular Class) 50% மேல் அடைவு பெற்றிருத்தல் வேண்டும்; தர நிலையில் அடைவு விழுக்காடு. பின் தங்கியதற்கான காரண விவரத்தினை TNF செயல் இயக்குநர் வாயிலாக CEO அவர்களுக்குச் சமர்ப்பித்து அவர்களின் வாயிலாக அவ்வாசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் எக்காரணம் கொண்டும் TNF- CEO அவர்களின் அனுமதியின்றி TNF ஆசிரியர்களின் மீது எவ்வித நடவடிக்கையும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொள்ளக்கூடாது.

### 6. மாணவர்கள் தொடர் கற்றல் நிலை அல்லது தற்போதைய நிலைப்பதிவேடு:-

ABC வகுப்பு பயின்ற பிறகு ஒவ்வொரு மாணவனின் தொடர் கற்றல் (உயர்கல்வி) மற்றும் அம்மாணவர்களின் தற்போதைய நிலை குறித்து மாணவர்களை தொடர்பு எண் வாயிலாகவோ TNF ஆசிரியர்கள் துணைகொண்டோ அல்லது அந்தந்த மாணவர்களின் வாயிலாகவோ பெற்று மிகச் சரியான உண்மை விவரத்தினைப் பதிவேட்டில் பதிவு செய்து ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஆகஸ்ட் மாதம் அவ்விவரங்களை அலுவலக மின்னஞ்சலுக்குத் திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுப்ப வேண்டும்.

### 7. அனுபவ பகிர்வு பதிவேடு Case Study Record:

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் 3 மாணவர்கள் வீதம் அதாவது, மிகவும் கற்றலில் பின் தங்கிய 6-ம் வகுப்பு மாணவர்களை TNF-ABC வகுப்பு ஆண்டு தொடக்கத்திலேயே தேர்வு செய்து அம்மாணவர்களின் Base Line Test மற்றும் ஆரம்ப கற்றல் நிலை வீடியோ போன்ற விவரங்களைப் பள்ளிதோறும் தயார் செய்து அவ்விவரங்கள் அனைத்தையும் TNF அலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.

மேலும், அம்மாணவர்களின் தொடர் கற்றல் நிலை மேம்பாடு குறித்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை எழுத்துத் தேர்வு விடைத்தாள்கள், வாசிப்புத்திறன் வீடியோ மற்றம் அம்மாணவரின் TNF-ABC வகுப்புப் பயன்பாடு குறித்த வீடியோ அனுப்ப வேண்டும்.

மேலும், அம்மாணவர்கள் குறித்து வகுப்பாசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்களின் கருத்துரை-களையும் (Feedback) பெற்று ஒருங்கிணைப்பாளர் அனுப்ப வேண்டும்.

### 8. தொடர் விடுப்பு, இடை நிற்றல், மாற்றுச் சான்றிதழ் கோரும் மாணவர்கள் விவரப் பதிவேடு:-

TNF-ABC வகுப்பிற்குத் தொடர் விடுப்பு, இடை நிற்றல் மற்றும் மாற்றுச் சான்றிதழ் வேண்டும் மாணவர்களின் விவரங்களைத் திட்ட ஒருங்கிணைப்-பாளர் ஒவ்வொரு வருகையின்போதும் TNF-ABC வகுப்பு மாணவர்களின் வருகைப் பதிவேட்டினைச் சரிபார்த்து; மேலும் TNF-ABC ஆசிரியரின் வாயிலாக ABC வகுப்பிற்கு வராத மாணவர்களின் விவரங்களைப் பெற்று, வகுப்பாசிரியர்கள் அல்லது தலைமை-யாசிரியர் அவர்களிடம் அது குறித்துக் கலந்தாய்வு செய்து தலைமையாசிரியர் அனுமதியுடன் வகுப்பாசிரியர்கள் மற்றும் TNF-ABC வகுப்பு ஆசிரியர்கள் துணை கொண்டு மேற்கண்ட மாணவர்களின் கற்றலின் மீதான சிக்கல்களுக்கான தீர்வைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்ள வேண்டும்.



மேலும், அப்பகுதியின் உள்ள பெற்றோர்ஆசிரியர் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் துணைகொண்டும் மாணவர்களின் கற்றல் பிரச்சினைகளுக்கு ஒருங்கிணைப்பாளர் தீர்வு காண வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலினையும் TNF செயல் இயக்குநர் மற்றும் திட்ட அலுவலர் அவர்களுக்குத் தெரிவித்து முறையான அனுமதி பெற்று இச்செயல்களைச் செயல்படுத்த வேண்டும் அவ்வாறு மேற்கொண்ட செயல் விவரங்களை எழுத்து வாயிலாகவும், புகைப்படம், வீடியோ மற்றும் மாணவரின் கருத்துரைகள் பெற்றும் TNF மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.

**பள்ளிக்கு வந்தும் ABC வகுப்பிற்கு வராத மாணவர்கள்:–**

ABC-வகுப்பில் பயிலும் மாணவர்களில் ஒரு சில மாணவர்கள் பள்ளிக்கு வருகை புரிந்தும், தொடர்ந்து ABC வகுப்பிற்கு வருகை புரிவதில்லை அவ்வாறு இருக்கும் மாணவர்களை TNF-ABC ஆசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியரிடம் முறையாகத் தெரிவித்து அம்மாணவர்களுக்கு உரிய கருத்துரை வழங்கியும் அம்மாணவர்களின் சூழ் நிலைகளை ஆராய்ந்தும் அவர்கள் தொடர்ந்து TNF–ABC வகுப்பில் பங்குபெற்று சிறந்த கற்றல் தரநிலை அடையும் வரை தொடர் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

## 9. விடைத்தாள் கோப்பு (Answer Paper File)

மெல்லக் கற்கும் மாணவர்களின் ஆரம்ப நிலையில் இருந்த கற்றல் திறன் மற்றும் (Move to Regular Class) கற்றல் தரநிலை முழுமையடைதல் வரை ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறனை மதிப்பீடு செய்ய சான்றுகளுடன் சமர்ப்பிக்க வசதியாக ஒவ்வொரு மாணவரின் மாதாந்திர விடைத்தாள்களைக் கோப்பில் (File) மாத வாரியாக இணைத்து வர வேண்டும்.

மேற்கண்ட பதிவேடுகளை ABC வகுப்பு ஆசிரியர் மிகச்சரியான முறையில் உரிய நேரத்தில் மிகச் சிறப்பாக மேற்கொண்டு வர வேண்டும்.

**பார்வையாளர்களின் கையொப்பம்:–**

பள்ளியில் ABC வகுப்பிற்குப் பார்வையிட வரும் TNF நிர்வாகிகள் அல்லது கல்வி அலுவலர்களிடம், ABC வகுப்புச் செயல்பாடுகளின் விவரங்களை எடுத்துரைத்து உரிய பதிவேடுகளின் விவரங்களைச் சமர்ப்பித்து அப்பதிவேடுகளில் பார்வையாளர்களின் கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# 11. பயிற்சிகள்

## அ) ஆசிரியர்கள் பயிற்சி:– (TNF-ABC-Teacher Training)

ABC திட்டத்தில் உள்ள மெல்லக்கற்கும் மாணவர்–களுக்குக் கற்பிக்கும் ஆசியர்களுக்குக் கற்பிக்கும் திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு அறக்கட்டளை ஆண்டுதோறம் பயிற்சியினை நடத்துகிறது. இதில் ஆங்கிலம், தமிழ் மற்றம் கணக்கு பாடங்களில் திறன் வாய்ந்த சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்ட வருகிறது.

இப்பயிற்சியில் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களை 6–ல் இருந்து 9ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு எவ்வாறு எளிய முறையில் கற்கும்வண்ணம் கற்பிப்பது என்பதைக் குறித்த கற்பித்தல் வழிமுறைகள் (Methodologies) செயல் முறைகள் (Practical) கலந்தாய்வு (Discussion) குழு கலந்தாய்வு (Group Discussion) செயல்முறைகள் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பயிற்சி (Preparation of Learnig aids) அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் ஒவ்வொரு TNF ஆசிரியரும் பங்குகொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக இரண்டு மையங்களாக அமைத்து அந்தந்தப் பயிற்சி மையம் அருகில் உள்ள மாவட்டங்களில் TNF-ABC பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

அவ்வாசிரியர் பயிற்சி மாவட்ட அளவில் சிறந்த Block Resource Trainers (BRT) வாயிலாக Samagra Shiksha Abhiyan( SSA) திட்டத்தின் மூலம் அளிக்கப் பட்டது. ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் இரண்டு நாட்கள் பயிற்சி அளிக்கபட்டது. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் வகுப்புகள் நடத்துவதற்காக, கையேடுகள் வழங்கப்பட்டது. கணக்கு பாடத்தில் கடினக்கணக்குகளை எளிய




முறையில் கற்பித்தல் குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

## ஆ) புத்தாக்கப் பயிற்சி:–

புத்தாக்கப் பயிற்சி வாயிலாகக் கற்பித்தல் உத்திகள் (Instructional Games) கொண்டு கற்பித்தல் குறிகோளான வெற்றியடையும், ஒரு பாடக் கருத்தை நிபுணத்துவமுறையில் அல்லது வல்லமையான முறையில் (Expert Way) கற்பிக்கவும், மேலும் ஓர் ஆசிரியரிடம் ஆழமான பாடப்பொருள் பற்றிய அறிவும், திறனும் இருப்பது அவசியமாகும் இவை பொருட்டுத் தமிழ்நாடு அறக்கட்டளை ABC–திட்டத்தின் கீழ் கற்பிக்கும் ஆசிரியர்களைப் புத்தாக்க ஆசிரியர் பயிற்சி வாயிலாக நல் நவீன கற்பித்தல் உத்திகளைச் சிறந்த ஆசிரிய பயிற்சியாளர்களைக் கொண்டு




1. Activity Based Teaching method - செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறை

2. Supplementary Aids - துணைக்கற்றல் வசதிகள்

3. Teaching Strategy - கற்பித்தல் முறை

4. Evaluation - மதிப்பிடுதல் முறை

ஆகியவைகளில் பயிற்சிகள் அளிக்கப்படும் மாணவர்களின் கற்றலின் இலக்குகளையும் கற்பித்தலின் நோக்கங்களையும் வெற்றியடையச் செய்ய இப்புத்தாக்கப் பயிற்சி பெரும் பயனுள்ள வகையில் மாற்றியமைக்கும்.

ABC வகுப்பு ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு அறக்கட்டளை வழங்கும் புத்தாக்க ஆசிரியர் பயிற்சியில் ஒவ்வொரு ABC ஆசிரியரும் எந்தக் காரணமும் கூறி நிற்றலில்லாமல் தவறாது பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

பள்ளியில் அல்லது அம்மாவட்டத்தில் உள்ள TNF நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூறும்போது ABC வகுப்பு ஆசிரியர்கள் அந்நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

# 12. திட்ட ஒருங்கிணைப்பாளர் பணிச்செயல்பாடுகள்

தமிழ்நாடு அறக்கட்டளை அளிக்கும் ஒவ்வொரு பணியினையும் குறித்த நேரத்தில், காலம் தாழ்த்தாமல் செவ்வனே முறையாகச் செய்து முடித்து அப்பணியின் அனைத்து நடவடிக்கைகளையும் புகைப்படம், வீடியோ (கருத்துறை) (Feedback) மற்றும் முழுத் தகவல்களையும் தமிழ்நாடு அறக்கட்டளைக்குத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு செயல் திட்டத்தின் நோக்கத்தினை அறிந்து அத்திட்ட இலக்கினை முழுமையடையச் செய்ய வேண்டும். மேலும் ஒருங்கிணைப்பாளர் தாம் தினந்தோறும் மேற்கொள்ளும் பணிகளைச் செயல் இயக்குநர் (Executive Director) அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

## ABC – திட்ட செயலாக்க ஆய்வு:–

### பயணத் திட்டம்:–

திட்ட ஒருங்கிணைப்பாளர் முதலில் வாராந்திர முன் பணித்திட்டம் (Weekly Action Plan) தயார் செய்து; அதில் அந்த வாரத்தில் ஒவ்வொரு நாளும் தாம்செல்லும் இடம் மற்றும் கால அளவு மற்றும் பணி குறித்த விவரத்தினைக் குறிப்பிட்ட அதனை, முதல் நாளில் காலை 11 மணிக்குள் TNF அலுவலக மின்னஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

### மாறுபட்ட பயணத்திட்டம்:–

வாராந்திர முன்பணித்திட்டத்தில் ஏதாவது பணிக் குறுக்கீடு போன்ற செயல்கள் ஏற்பட்டால் TNF செயல் இயக்குநர் அவர்களுக்கு உடனடியாகத் தெரிவித்து அப்பணியினை மேற்கொள்ள வேண்டும்.

வாராந்திர பணி முன் பணித்திட்டத்தின்படி தினமும் பணியினை மேற்கொண்டு காலை 10 மணிக்குள் அன்று (Visit) பார்வையிடும் விவரத்தினை புலனம் வழியே (Whatsapp) தகவல் அனுப்ப வேண்டும்.

### திட்ட ஆய்வு:–

அ) ஒருங்கிணைப்பாளர், அவருக்கு வழங்கப்பட்ட பணியினைச் சிறப்படையச் செய்ய ஒவ்வொரு நாளும் அவர் மேற்கொண்ட பணிகுறித்து உள்ளாய்வு செய்து மேன்மேலும் அப்பணி சிறக்க உரிய முறையில் திட்டமிட வேண்டும்.

ஆ) திட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியரைச் சந்தித்து விட்டு ABC வகுப்பிற்குச் செல்ல அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும்.

இ) திட்ட ஒருங்கிணைப்பாளர் ABC திட்டப் பள்ளி வளாகத்திற்குச் சென்றவுடன் பள்ளித் தலைமையாசிரியர் அவர்களைச் சந்தித்து ஆசிரியர் வருகைப் பதிவேடு பெற்று TNF-ABC வகுப்பு ஆசிரியரின் தினசரி வருகையினைச் சரிபார்த்து அப்பதிவேட்டில் ஒருங்கிணைப்பாளர் பெயர் பதிவு செய்யப்பட்ட காலத்தில் தமது வருகையினையும் தலைமையாசிரியர் அனுமதியுடன் பதிவு செய்து கையொப்பம் இட வேண்டும்.

ஈ) வட்டாரக் கல்வி மைய அலுவலர்கள் (BRC Officers) பள்ளியில் மாணவர்களைப் மேற்பார்வையிட வரும்போது, அவ்வலுவலர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களைக் கையாளும் வழி முறைகளை நேரில் அறிந்து கொள்வர்; அது மட்டுமல்லாமல், அவர்கள், அரசு தனியாக மாநில அளவில் சிறந்த பயிற்சியாளர்கள் கொண்டு மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் திறன் வளர்ச்சிக்கு உதவும் பல பயிற்சிகளையும் மற்றும் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கெனச் சிறப்புப் புத்தகங்களையும் பெற்றிருப்பார்கள். எனவே அவர்களுடன் சிறந்த புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொண்டு TNF செயல்களை எடுத்துரைத்து அவர்களிடம் அறிவுரை சிறப்புப் புத்தகங்களையும் பெற்றுப் பெற்றுக் கொள்வது மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் திறன் தர நிலை முழுமையடையச் செய்வதில் பயனுள்ளதாக இருக்கும்.

உ) தலைமையாசிரியர்கள் மற்றும் வகுப்பு ஆசிரியர்களுடன் TNF-ABC திட்ட வகுப்பு பற்றியும் மெல்லக்கற்கும் மாணவர்களின் கற்றல் திறன் பற்றியும் ஒவ்வொரு வருகையின் போதும் கலந்தாய்வு செய்ய வேண்டும்.

ஊ) ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு பார்வையின் போதும் TNF-ABC ஆசிரியர் துணைகொண்டும் அவரவர் வகுப்பு மாணவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக உரையாடி, ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறனையும் கண்டறிய வேண்டும்.

எ) சிறந்த அணுகுமுறையோடு ஒவ்வொரு மாணவரையும் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப்பாடப் புத்தகங்களில் உள்ள செய்யுள் அல்லது மனப்பாடப் பகுதிகளை வாசிக்கவைத்தல் வேண்டும். அப்போது சில மாணவர்கள் தம் ஆசிரியரிடம் வகுப்பில் செவிவழியாகக் கேட்டுக்கேட்டுப் பெற்ற திறனால் கிடுகிடுவென சரளமாக வாசிப்பர் (ஒப்புவிப்பார்கள்) ஆனால் கைவிரல் வைத்து ஒவ்வொரு வரியாக வாசிக்கக்கூறினால் அம்மாணவரின் கைவிரலுக்கும் வாசிக்கும் வரிகளுக்கும் பொருத்தமற்று இருக்கக்கூடும். அவ்வாறு உள்ள மெல்லக்கற்கும் மாணவர்களிடம் சிறந்த உளவியல் அணுகுமுறையோடு அணுகி ஒவ்வொரு மாணவரும் எழுத்துகளை அறிந்துகொண்டும், வார்த்தைகளைப் புரிந்து கொண்டும் ஒவ்வொரு வரியாக வாசிக்கும் வண்ணம் TNF ஆசிரியர் துணைகொண்டு பயிற்சி வழங்குதல் வேண்டும்.

மொழிப்பாடங்களான தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒவ்வொரு மாணவரையும் வாசிக்க வைத்து அம்மாணவர்களின் வாசிப்புத்திறன்களைப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அப்பதிவேட்டில் மாணவர்களின் பெயர் வரிசை TNF-ABC திட்ட ஆசிரியரின் மாதாந்திர மாணவர் மதிப்பெண் பதிவேட்டில் உள்ளவாறு வரிசை மாறாமல் ஒரே சீராகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட பதிவேட்டில் ஒவ்வொரு மாணவரின் வாசிப்புத் திறன் மதிப்பீடு மிக துல்லியமாக இருத்தல் வேண்டும். அம்மதிப்பீடு கொண்டு ஒவ்வொரு முறையும் வாசிக்க வைக்கும்போது அம்மாணவரின் வாசிப்புத்திறன் முன்னேற்றம் அடைந்து தொடர்ந்து வளர்ச்சி பெற வைப்பது TNF ஆசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளரின் முதன்மைப் பணியாகும்.

துவக்கத்திலேயே மாணவர்களுக்குக் கல்வியுடன் கூடிய சிறந்த ஒழுக்கப் பண்பு, குண நலன்களைக் (இன்றைய சூழ்நிலைக்கேற்ப) கற்பித்தல் மிகவும் இன்றியமையாதது. அது மட்டுமின்றி மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சிறந்த நீதிகள், பழமொழிகள் கூறி மாணவர்களின் சிந்தையினை வளம்பெறச் செய்தல் வேண்டும். அம்மாணவர்கள் வகுப்பில் கற்ற நீதிகள், பழமொழி போன்றவைகளைப் பெற்றோருடன் அல்லது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும். அப்போது, அது அவர்களிடையே மேன்மேலும் நற்சிந்தனைகள் தோன்றி அவை நல்ல கருத்துகளாக மாறி அவர்கள் சிறந்த மனிதர்களாக உருமாறி, நல்ல சமுதாயம் தோன்ற வித்திட வேண்டும்.

## மாணவர்களின் உடல் நலம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு:–

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறன் மற்றும் அம்மாணவரின் சூழ்நிலைகளை அறிந்திருத்தல் வேண்டும். ஒரு சில மாணவர்களின் உடல் நலம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் உரிய விவரங்களோடு செயல் இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அவர்கள் வழங்கும் வழிகாட்டுதலின்படி அம்மாணவர்களின் உடல்நலன்சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு வாராந்திரப் பணிகள் திட்டத்தின்படி பள்ளியில் வாசிப்புத்திறன் மதிப்பீடு அளவிடுதல் மட்டுமின்றி ABC வகுப்புகளில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் முன்மாதிரி வகுப்புகள் எடுக்க வேண்டும்.

TNF திட்ட ஒருங்கிணைப்பாளர் பள்ளிகளைப் பார்வையிடச் செல்லும்போது TNF-ABC வகுப்புகளில் ஒரு வகுப்பினை TNF திட்ட ஆசிரியர் எடுத்துக் கொண்டிருக்கும்போது, மற்ற ஏதேனும் ஒரு வகுப்பினைத் திட்ட ஒருங்கிணைப்பாளரும் எடுக்க வேண்டும்.

## TNF ஆசிரியர்களுக்கான வழி காட்டுதல்:–

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு பள்ளிக்கும் வருகைபுரியும் போது ABC வகுப்பில்தான் முழுமையாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். பள்ளிக்கு வருகைபுரிந்து பதிவேட்டில் கையொப்பம் செய்து,

வகுப்பினை மேம்போக்காக மேற்பார்வை செய்துவிட்டுச் செல்வது பணியல்ல. அன்றைய பணி திட்டமிட்டபடி முழுமையாக நடைபெற திறம்படப் பணியாற்ற வேண்டும். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு வருகையிலும் தொடர்ந்து முறையாகச் செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு மாணவரின் கற்றல் திறன் வளர்ச்சி குறித்தும், ஒவ்வொரு வருகையின் போதும் கலந்தாய்வு செய்து மாணவரின் கற்றல்திறன் வளர்ச்சிப்பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

TNF திட்ட ஆசிரியருக்குக் கற்பித்தல் உபகரணங்களுக்குத் தேவையான பொருட்களைச் செயல் இயக்குநர் அவர்களுக்கு முறையாகத் தெரிவித்து அனுமதி பெற்று, அவற்றை அவர்களுக்குப் பெற்றுத் தரவேண்டும். மேலும் BRC அலுவலர்களிடமிருந்து சிறப்புக் கையேடுகள் மற்றும் புத்தகங்களையும் பெற்றுத் தரவேண்டும்.

மேலும், அவ்வப்போது நூலகங்கள் வாயிலாக தன்னம்பிக்கை மாத இதழ் Inspiring Educational Magazine – Genious Punnagai School மாத இதழ், தினசரி நாளிதழ்களில் வரும் சிறந்த கட்டுரைகள் போன்ற பயனுள்ள நூல்களைப் பெற்று TNF திட்ட ஆசிரியரிடம் வழங்கி மாணவர்களுக்குச் சிறந்த கற்பித்தலை மேற்கொள்ள அறிவுரைகள் கூறி வழிவகை செய்ய வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் ABC வகுப்பு மாணவர்களின் TNF வகுப்பு நோட்டுப் புத்தகங்களை ஆய்வு செய்து முறையாகப் பயன்படுத்துகின்றனரா? மற்றும் ஆசிரியரின் தினசரி கற்பித்தல் செயல்பாடுகள் மாணவரின் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா எனப் பார்வையிட வேண்டும்.

ஒவ்வொரு நாளும் TNF ஆசிரியர் ABC வகுப்பில் மேற்கொள்ளும் கற்பித்தல் செயல்பாடுகள் ஆசிரியரது தினசரிப் பணிப்பதிவேட்டில் முறையாக எழுதப் பட்டுள்ளதா எனச் சரி பார்க்க வேண்டும். சில ஆசிரியர்கள் முன் கூட்டியே நன்கு கையெழுத்து எழுதக்கூடிய மாணவர்களைக் கொண்டு எழுதுவர் அவ்வாறு இருப்பின் சரிபார்த்து அவ்வாசிரியர்களுக்கு உரிய முக்கியத்துவத்தை விளக்கி எடுத்துரைக்க வேண்டும். அத்தினசரி பதிவேடுகளிலிருந்து மாதாந்திர TNF தேர்வினை மேற்கொள்ள சிறந்த வினாக்களைக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

ABC ஆசிரியர் ஒவ்வொரு நாளும் அவர்தம் கற்பித்தல் செயல்பாடுகளை பாடவாரியாக தினசரிப் பதிவேட்டில் எழுதியிருப்பார். திட்ட ஒருங்கிணைப்பாளர் ABC ஆசிரியரின் தினசரிப் பதிவேட்டிலிருந்து தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களுக்கான மாதாந்திரத் தேர்விற்கு வினாத்தாள் தொகுப்பு தயார் செய்ய வேண்டும்.

வினாத்தாள் தொகுப்பு மாணவர்களின் அறிவுக் கூர்மை மற்றும் எழுத்துத் தேர்வுத் திறன் சிறக்கும் விதமும், வினாவிற்கான விடைகள் இரண்டு வரிகளுக்கு மேல் இல்லாமல் குறைவாக எழுதும் வகையிலும் அமைய வேண்டும், 15 வினாக்களுக்குக் குறையாமல் வினா எண்ணிக்கை இடம் பெற வேண்டும். ஒவ்வொரு மாதமும் வினாத்தொகுப்பு வெவ்வேறு பாடங்களிலிருந்து இருக்க வேண்டும் (தொடர்ந்து அடிப்படைப் பாடங்களிலிருந்து வினா தொகுப்பு இருத்தல் கூடாது) மற்றும் மெல்லக் கற்கும் மாணவர்களின் ஆர்வத்தினைத் தூண்டும் விதமாகவும் மாதாந்திர TNF தேர்வுகளைச் செயல்படுத்த வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு மாதமும் ABC வகுப்பு மாணவர்களின் வாசிப்புத் திறன் மதிப்பீடு மற்றும் மாதாந்திர எழுத்துத் தேர்வு மதிப்பெண் மதிப்பீடு விவரங்களைப் பற்றியும் ஒவ்வொரு மாதமும் கற்றலில் முன்னேற்றம் அடைந்த மாணவர்களின் விவரங்கள், கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் மற்றும் விடுப்பு, இடை நிற்றல் மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும் திட்ட ஆசிரியருடன் கலந்தாய்வு செய்ய வேண்டும். மேலும் திட்ட ஆசிரியருக்கு ஒவ்வொரு மாதமும் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் திறன் தர நிலை முழுமையடைதல் குறித்த இலக்கினை வழங்கி, அவ்விலக்கினை அடைய திட்ட ஒருங்கிணைப்பாளர் தொடர் வருகை மூலம் சிறப்பான ஊக்கம் அளித்து கல்வியாண்டு இறுதிக்குள் அச்செயல்பாட்டினை வெற்றியடையச் செய்ய வேண்டும்.

## கற்றலில் தேர்ச்சி அடைந்த மாணவர்களை நன்கு படிக்கும் மாணவர்களுடன் கல்வி பயிலச் செய்தல்:–

ABC வகுப்பில் வாசிப்புத்திறன், எழுத்துத் தேர்வுத்திறன், முழுமையான கற்றல் திறன்களில் முன்னேற்றமடைந்த மற்றும் தரநிலை முழுமையடைந்த மாணவர்களை உறுதிப்படுத்துதல் பொருட்டு ABC வகுப்பிற்குத் தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியர் அவர்களை வருமாறு, அவர்களை அழைத்துச் சென்று அவர்கள் முன்னிலையில் தரநிலை முழுமையடைந்த மாணவர்களை சோதித்துக்காட்ட தலைமையாசிரியர் அனுமதியுடன் ABC வகுப்பில் அவர்களை Regular Class க்கு அனுப்புதல் வேண்டும். இதுவே Moved to Regular Class எனக் கணக்கிடப்பட– வேண்டும்.

Regular Class சென்ற TNF-ABC வகுப்பு மாணவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டும் மேலும் மெல்லக் கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் பள்ளியில் காலை இறைவணக்கக் கூட்டத்தில் தரநிலை முழுமையடைந்த TNF-ABC மாணவர்களுக்குப் பரிசுகள் அளித்தும், மேன்மேலும் அம்மாணவர்கள் கற்றலில் தொடர்ந்து சிறக்க தன்னம்பிக்கை ஊட்டக் கூடிய உரையுடன் சிறப்புச் செய்தல் வேண்டும் மேற்கண்ட செயல்களைத் திட்ட ஒருங்கிணைப்பாளர்தான் அனைவரையும் தொடர்பு கொண்டு எடுத்துரைத்து ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொண்டு சிறப்பாகச் செய்தல் வேண்டும்.

இதுபோன்று செய்யப்படும் நிகழ்வுகளில் கற்றலில் முழுமையடைந்த TNF-ABC வகுப்பு மாணவர்கள் Regular Class சென்ற TNF-ABC வகுப்பு பற்றி (Feedback) கருத்துரையைக் கூறச்சொல்லி வீடியோ பதிவுகளை மிகத் தெளிவாக எடுக்க வேண்டும் மற்றும் அம்மாணவர்களின் எண்ணங்களை எழுத்து மூலமாகவும் எழுதச் செய்து, பெற்றிட வேண்டும். இதேபோன்று வகுப்பு ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியரிடமும் அம்மாணவர்கள் குறித்து வீடியோபதிவு மற்றும் எழுத்து பூர்வமான கருத்துகள் பெற்று தமிழ்நாடு அறக்கட்டளைக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு தங்கள் வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்களைக் கற்றலில் தொடர்ந்து சிறந்து விளங்குகின்றாரா எனவும்; மேலும் அம்மாணவர்களின் பள்ளி வருகையினையும் வகுப்பு ஆசிரியர் துணைகொண்டு திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் TNF-ABC திட்ட ஆசிரியர் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.


ABC வகுப்பில் மொத்தம் உள்ள மாணவர் எண்ணிக்கையில் கற்றலில் முழு தரநிலை அடைந்த (Move to Regular Class சென்ற) மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டே வருதல் வேண்டும். ஆனாலும் இம்மாணவர்களுக்கு அக்கல்வியாண்டு முழுவதும் மாதாந்திர எழுத்துத் தேர்வு மற்றும் வாசிப்புத்திறன் தேர்வுகளை மட்டும் தொடர்ந்து செயல் முறைப்படுத்த வேண்டும். மேலும், அம்மாணவர்களைக் கொண்டு (Group) குழு அமைத்து, அக்குழுவிற்கு முன்னேற்றம் அடைந்த மாணவர்களைத் தலைவராக நியமித்து; மற்ற மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், கற்றல் முன்னேற்றம் அடைந்த மாணவர்களுக்கு மேன்மேலும் கற்றலின்பால் ஆர்வம் ஏற்படும் வண்ணமும் வகுப்புகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இது போன்ற TNF-ABC வகுப்புகளில் மெல்லக் கற்கும் மாணவர்களாகப் பயின்று இன்று அவர்கள் பெற்றுள்ள சிறந்த பயன்களை தற்பொழுது TNF-ABC வகுப்பில் பயிலும் மெல்லக் கற்கும் மாணவர்களிடையே முன்னிலைப்படுத்தி கலந்தாய்வு செய்து மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மனதளவில் பெரும் தன்னம்பிக்கையை ஒருங்கிணைப்பாளர் ஏற்படுத்த வேண்டும்.

இதுபோல் ஒவ்வொரு மாணவரின் நடவடிக்கைகளையும் மற்றும் செயல்பாடுகளையும் பகுப்பாய்வு செய்து, தேவையான செயல்களை அரவணைத்தும்; வேண்டப்படாத தீங்குவிளைவிக்கும் செயல்களை அகற்றுவது குறித்தும் எடுத்துரைத்து அறிவார்ந்த சிறந்த பண்பான மாணவர்களை உருவாக்குதல் வேண்டும்.

## 13. இதர பணிகள்

### 1. ABC திட்ட மென்பொருள் பதிவேற்றம்:–



ஒருங்கிணைப்பாளர் இந்த மென்பொருளில் (Software) ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதிக்குள் மாணவர்களது மாதாந்திர மதிப்பெண் விவரங்களை உள்ளீடு (Enter) செய்தல் வேண்டும். அவ்வாறு உள்ளீடு செய்யும்போது பிழை ஏற்படா வண்ணம் மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும். மேலும், ஏதேனும் பிழை ஏற்படின் அப்பிழை குறித்த முழு விவரங்களையும் TNF அலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்பத் தொடர்ந்து கவனித்து (Follow up) உடனடியாகப் பிழைதிருத்தம் செய்யப்பட வேண்டும் ஒவ்வொரு திட்ட ஒருங்கிணைப்பாளரும் அவர்தம் விவரங்களை முறையாகவும் மிகச் சரியான முறையிலும் பதிவு செய்து தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும்.

### 2. பெற்றோர் ஆசிரியர் கழக ஒருங்கிணைப்பு:–

பள்ளியில் அவ்வப்போது பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டம் நடைபெறும் நாள், விவரங்களைத் தலைமையாசிரியரிடம் திட்ட ஒருங்கிணைப்பாளர் கேட்டறிந்து, தன் தினசரிப் பணிப் பதிவேட்டில் குறித்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்திலும் திட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டு, அப்பள்ளியில் செயல்படுத்தும் செயல்பாடுகளையும், மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுதல் குறித்தும் **(Moved to Regular Class)** முழுதரநிலை அடைந்துதம் வகுப்பிற்குச் சென்ற மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும் மற்றும் தமிழ்நாடு அறக்கட்டளையின் அமெரிக்க வாழ் தமிழர்களின் அர்ப்பணிப்புச் சேவை குறித்தும் ஒவ்வொரு பெற்றோரும் அறிந்து கொள்ளும் வகையில் மிகவும் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றால் மட்டுமே ஒருங்கிணைப்பாளர் ஒரு பள்ளியில் கலந்துகொண்டு, மற்ற பள்ளியில் நடைபெறும் கூட்டத்தில் TNF-ABC ஆசிரியர்களைப் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

### 3. கல்வித்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு:–

பள்ளிக்குக் கல்வி அலுவலர்கள் வருகை புரியும்போது, தலைமை ஆசிரியர் அனுமதி பெற்று, அவரின் வாயிலாக அக்கல்வி அலுவலர்களை TNF-ABC வகுப்புகளுக்கு அழைத்துச் சென்று TNF-ABC திட்டம் பற்றியும், TNF செயல்பாடுகள் பற்றியும் மற்றும் மாணவர்களின் கற்றல் திறன் வளர்ச்சி குறித்தும், வகுப்பில் மேற்கொள்ளும் பதிவேடுகள் கொண்டு தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். மேலும் திட்ட ஒருங்கிணைப்பாளர் அக்கல்வி அலுவலர்களுக்கு TNF குறித்த ஆண்டு மலர் புத்தகம் ABC திட்டக் கையேடு ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

### 4. நூலகம் ஓர் ஆலயம் – திட்ட செயலாக்கம்:–

திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களின் அனுமதி பெற்று TNF-ABC திட்டப் பள்ளிகளில் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப் போட்டி ஆகியவற்றை நடத்துவதற்குச் சிறந்த தலைப்புகளைத் தயார் செய்து அவர்களுக்குச் சமர்ப்பித்து முறையான அனுமதி பெற்றுப் பின்னர் தலைமையாசிரியர் அவர்களைச் சந்தித்து, அவரிடமும் அனுமதி பெற்று ஆர்வமுள்ள மாணவர்களுக்குத் தொடர்ந்து நடத்தி வரவேண்டும்



பின்பு அக்டோபர் மாதம் TNF வழங்கும் தலைப்புகள் கொண்டு மாணவர்களிடையே பன்முகத்தன்மையைச் சிறக்கச் செய்து, சிறந்து விளங்கும் மாணவர்களைத் தேர்வு செய்தும் நூலகங்கள் பற்றி விழிப்புணர்வு

குறித்த கருத்துரைகளை மாணவர்களிடையே திட்ட ஒருங்கிணைப்பாளர் அவ்வப்போது கூற வேண்டும். மேலும், நவம்பர் முதல் வாரத்தில் நூலக வார விழாவினை நூலக அலுவலகர்கள் மற்றும் கல்வி அலுவலர்கள் கொண்டு; போட்டியில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி TNF-ன் **"நூலகம் ஓர் ஆலயம்"** திட்டத்தினைச் சிறப்பாக விளக்கி நவம்பர் முதல் வாரத்திற்குள் செயலாற்ற வேண்டும்.

### 5. TNF-ABC வகுப்பு மாணவர்களைப் பள்ளிப் படிப்பு முடித்த பின்பும் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்தல்:-

TNF வகுப்புகளில் பயின்று சென்ற மாணவர்களின் தொடர் கற்றல் அல்லது அவர்களின் நிலை குறித்த விவரங்களை உரிய முறையில் பெற்று அம்மாணவர்களின் நிலை குறித்துத் தொடர்ந்து முழுவிவரங்களைப் பதிவேடுகளில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பதிவு செய்து வரவேண்டும். மேலும், அவ்விவரங்களை TNF அலுவலக மின்னஞ்சலுக்கும் அனுப்ப வேண்டும்.

### 6. கல்வி உதவித் தொகை வழங்கிட உதவுதல்:-

TNF வகுப்பு மற்றும் TNF-ABC திட்டப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் உயர் கல்வியைத் (அரசு கல்வி நிறுவனங்கள்) தொடர இயலாமல், பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருந்தால் அத்தகைய மாணவர்களை அறிந்து, அம்மாணவர்களின் முழு விவரங்களையும் TNF அலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். (மேலும் திட்ட ஒருங்கிணைப்பாளர் எவரும் கல்வி உதவித் தொகை TNF-இடம் பெற்று வழங்குவதாக முன்னரே கூறவோ உறுதியளிக்கவோ கூடாது.) TNF-உரிய விவரங்களைக் கொண்டு உரிய மாணவர்களைத் தேர்வு செய்து, கல்வித்தொகை வழங்கும். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு நாளும், தான் மேற்கொள்ளும் பணிகள் குறித்த முழு விவரங்களையும் தன்னுடைய தினசரி பதிவேட்டில் பதிவு செய்வது மட்டுமின்றிப் பணிகளில் ஏற்படும் சிறப்பான நிகழ்வுகளை அவ்வவ்போது புகைப்படம், வீடியோ எடுப்பதுடன் கருத்துரைகளையும் பெற்று ABC திட்டம் குறித்த அனைத்து விளைவுகளையும் அவ்வப்போது TNF அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், TNF-ABC திட்டம் அதன் இலக்கு உச்சம் அடைய, ஒவ்வொரு நாளும் அதற்கான செயல்களை முறையாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் செயல்படுத்தி வரவேண்டும். மேலும், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒவ்வொரு ABC மாணவரின் முழுவிவரத்தையும் அறிந்திருக்கும் வண்ணம் செயல்பட வேண்டும்.



### 7. இயற்கை இடர்ப்பாடுகளின் போது:-

TNF இயற்கைப் பேரிடர் ஏற்படும் காலங்களில் மக்களுக்கு எண்ணற்ற உவிகளைச் செய்து வருகிறது. கடந்த காலங்களில் கடலூர் மற்றும் சென்னையில் பெருவெள்ளத்தினால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அப்போது TNF திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் TNF ஆசிரியர்கள் இணைந்து மக்களின் உடனடித் தேவைகளான உணவு, உடை, தங்குவதற்கு இடம் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்து மக்களுக்குப் பேருதவி செய்துள்ளனர்.

மேலும், சென்னை அசோக் நகர் நூலகத்திற்குப் பெருவெள்ளத்தினால் முழுவதுமாகப் பாதிப்பு ஏற்பட்டபோது பல இலட்ச ரூபாய்களைச் செலவிட்டு அந்த நூலகம் இன்று புதுப்பொலிவுடன் திகழ்ந்திட TNF பேருதவி செய்தது.

மேலும், கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 4 கிராமங்களைத் தேர்வு செய்து, அங்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மொத்தம் 135 வீடுகளைக்



கட்டிக்கொடுத்தது. மேலும், பண்ருட்டி,குறிஞ்சிப்பாடி ஒன்றியங்களில் சேதமடைந்த 20 அரசுப் பள்ளிகளைப் புனரமைத்துக் கொடுத்தது.

கஜா புயலால் பாதிப்பு ஏற்பட்டபோது நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் பேரழிவினால் பாதிக்கப்பட்டன. அங்கேயும் மக்களின் உடனடி தேவைகளான உணவு, உடை தங்குவதற்கு இடம் போன்றவற்றைத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். மேலும், பேரழிவினால் பாதித்த பள்ளிகளை TNF புனரமைத்துக் கொடுத்தது. மேலும், அந்த மாவட்டங்களில் வீடுகளை இழந்தவர்களுக்குத் தமிழக அரசுடன் இணைந்து 123 குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்காக தமிழக அரசுடன் இணைந்து அடித்தளம் (Basement) போட உதவி செய்தது.

## 8. கொரோனா வைரஸ் நோய்பாதிப்பின் போது:-

### அ) மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பணி:

கொரோனா வைரஸ் பரிசோதனை செய்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் RT-PCR கருவியினை சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரிக்கு தமிழ்நாடு அறக்கட்டளை வாங்கிக் கொடுத்துள்ளது. மக்களுக்கு நோய்த் தொற்றைக் கண்டறிவதற்கும் இக்கருவி பேருதவியாக இருந்தது.



மேலும் மாஸ்க், சானிடைசர், பெட்சீட், தலையணையுறை போன்றவற்றையும் இலவசமாக மக்களுக்கு வழங்கி வருகிறது.

இதுபோன்ற பணிகளில் ABC திட்ட பணியாளர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் உதவிட வேண்டும்.

### ஆ) ABC திட்ட சிறப்பு கல்விப் பணி

கொரோனா நோய் பாதிப்பு காரணமாக பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் ஆன்லைன் வகுப்பு மற்றும் கல்வித் தொலைக்காட்சி மூலமாக பாடம் கற்பிக்கும் முறை துவக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் தங்களின் குடும்ப சூழ்நிலை காரணமாக அவர்களால் ஆன்லைன் மற்றும் கல்வி தொலைக்காட்சி வாயிலாக கல்வி கற்க இயலாத சூழ் நிலையில், தமிழ்நாடு அறக்கட்டளை ABC திட்டத்தின் விருப்பமுள்ள ஆசிரியர்கள் மூலமாக சிறப்பு கல்வி பணியினை துவங்கியுள்ளது. இத்திட்டத்தில் ABC திட்ட ஆசிரியர்கள் அவரவர் வசிக்கும் இடங்களிலேயே தொலைக்காட்சி, மடிக்கணினி மற்றும் திறன்பேசி (ஸ்மார்ட் போன்) மூலமாக கல்வித் தொலைக்காட்சியில் நடத்தப்படும்



பாடங்களை இப்பகுதியிலுள்ள ABC திட்டம் மற்றும் ABC திட்டத்தில் இடம்பெறாத மாணவர்கள் பயன் பெறச் செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 46 ABC திட்ட ஆசிரியர்களைக் கொண்டு 720 அரசுப்பள்ளி மாணவர்கள், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், இராணிப்பேட்டை, தூத்துக்குடி, தென்காசி, சிவகங்கை. சேலம், நாமக்கல் மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் பயனடைந்துள்ளனர்.

தமிழக அரசால் கல்வித் தொலைக்காட்சி மூலம் நடத்தப்படும் பாடத்தை ABC திட்ட ஆசிரியர்களைக் கொண்டு அந்தந்தப் பகுதி மாணவர்கள் கற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான வழிகாட்டி நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.



## திட்ட ஒருங்கிணைப்பாளர் பேண வேண்டிய பதிவேடுகள்:-

**1. வாராந்திர முன்பணித்திட்டம் (Weekly Action Plan)**

திட்ட ஒருங்கிணைப்பாளர் தான் ஒரு வாரத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து (Weekly Action Plan) வார முதல் நாளே முறையாகத் தயார் செய்து TNF மின்னஞ்சலுக்கு திங்கட்கிழமை 10.00 மணிக்குள் அனுப்பி வைத்திட வேண்டும்.

மேற்கண்ட பணித்திட்டம் திட்டமிட்டதற்கு ஏற்றாற்போல் தினசரி பணியினை மேற்கொண்டு வரவேண்டும். இப்பணித்திட்டத்திற்கு இடையே TNF வேறு பணியினை வழங்கினால் அப்பணி மேற்கொண்டது குறித்தும் தன்னிடம் உள்ள தினசரி/வாராந்திர முன் பணித்திட்டத்தில் மாற்றம் செய்து குறிப்பிட வேண்டும்.

**2.தினசரி பதிவேடு:-**

திட்ட ஒருங்கிணைப்பாளர் தான் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் பணி விவரங்கள் பணி நேரம் போன்ற முழுத்தகவல்களையும்தன்னிடம் உள்ள தினசரி பணிப்பதிவேட்டில் குறிப்பிட்டு எழுத வேண்டும். முதல் நாள் விவரம், பணி மேற்கொண்ட நேரம் மற்றும் அன்று மேற்கொண்ட பணிப்பதிவேட்டில் எழுதி; பணி மேற்கொண்ட பள்ளித் தலைமையாசிரியரிடம் திட்ட ஒருங்கிணைப்பாளர் அப்பள்ளியில் அன்று செய்த பணி விவரங்களை எடுத்துக் கூறி அவரது கையொப்பம் பெறுதல் வேண்டும்.

திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் (Review Meeting) சென்னையில் உள்ள TNF அலுவலகத்தில் நடைபெறும்போது கூட்டத்தில் வழங்கிய அனைத்துத் தகவல்களையும் குறிப்பெடுத்து, அன்று மேற்கொண்ட பணி விவரங்களைத் தினசரிப் பணிபதிவேட்டில் எழுதி TNF செயல் இயக்குநர் வாயிலாக CEO அவர்களிடம் சமர்ப்பித்துக் கையொப்பம் பெறவேண்டும். மேலும் வேறு பணி மேற்கொள்ளச் சென்றால் அப்பணி விவரம் குறித்து முழு தகவல்களையும் எழுத வேண்டும். அப்பணி மேற்கொள்ளும் போது TNF அலுவலர்கள் இருந்தால் அங்கு அவர்களின் கையொப்பம் பெறவேண்டும். இல்லையேல் TNF ஆய்வுக்கூட்டம் (Review Meeting) வரும்போது கையொப்பம் பெறாத பணி விவரங்களைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமை அலுவலகம் செல்லும்போது செயல் இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்து மற்றும் CEO அவர்களிடம் கையொப்பம் பெற வேண்டும்.

**3. மாணவர் விவரப் பதிவேடு:-**

திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர் பணி மேற்கொள்ளும் மாவட்டத்திற்கு எனத் தனித்தனியாக மாவட்டந்தோறும் உள்ள ABC வகுப்பு பயிலும் மாணவர்களின் விவரங்களை ஒவ்வொரு கல்வியாண்டும் ஒரு பதிவேட்டில் அந்த வருடம் பயின்ற மாணவர்கள் குறித்த விவரங்களை முறையாக எழுத வேண்டும். குறிப்பிட்ட ஒரு மாணவர் குறித்து விவரம் தேவைப்படும் போது அம்மாணவரின் தொடர் கற்றல் அல்லது தற்போதைய நிலை குறித்து அறிய வேண்டிய விவரங்கள் அனைத்தும் மிகச் சரியான முறையில் கிடைக்கும் வகையில் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். **Annexure (IV)**

## ஆக்கம்

**முனைவர் க. இளங்கோ,**
முதன்மைச் செயல் அலுவலர்.

**திருமதி வசுமதி பென்னி,**
செயல் இயக்குநர்

**திரு. கே.சு. உதயகுமார்,**
திட்ட ஒருங்கிணைப்பாளர், இராணிப்பேட்டை

**திருமதி க. சங்கீதா,**
திட்டக் கணக்காளர்

**திரு. பா. சதீஷ்குமார்,**
கணக்காளர்

**திரு.செ. ஆதிசிவனேஸ்வரன்,**
திட்ட உதவி பணியாளர்

# Annexure (I)

GOVERNMENT OF TAMIL NADU

DEPARTMENT OF SCHOOL EDUCATION

SCHOOL IMPROVEMENT AND DROP OUT PREVENTION SCHEME

**(Revised Memorandum of Understanding)**

This Memorandum of understanding is entered into on the 29th day of May 2010 , by and between the Government of Tamil Nadu (herein after referred to as "Government"), represented by the Director of School Education, Chennai / Director of Elementary Education, Chennai who has been authorized to execute this Memorandum of Understanding (MOU) on behalf of the Government of Tamil Nadu (including his successors in office and assigns of) on one part and Dr. A.M. Swaminathan, IAS (Retd), Chairman, Tamil Nadu Foundation Inc. TN Chapter, Chennai on the other part (hereafter called the "Donor").

Whereas the Donor in collaboration with the Government has desired to take up the all round improvement of schools situated in Tamil Nadu as per G.O. (Ms) No.211/School Education (E1) Department, dated 21.10.2008 and also amendment issued in this G.O.(MS)No.119, School Education (E1) Department, Dated 1.6.2009 and has agreed to adopt the said Schools as per the guidelines in the said orders for preparing "ACTION PLAN".

The Action Plan will be designed to prevent school drop outs and to bring in children who have already dropped out back to the school based on the actual needs of the schools by the donor in coordination with the Chief Educational Officer / District Elementary Education Officer.

The Donor has identified the following items of works from among the 10 items of works indicated in Para 3 of the G.O. (MS) No.211, School Education (E1) Department dated 21.10.2008 for preparation of "ACTION PLAN" in consultation with the Head Masters of various Schools and the Chief Educational Officer/District Elementary Educational Officer of the concerned district.

1. Provide uniforms, note books, pens, coloring notes, music note books
2. Conduct Music, Yoga and Drawing classes
3. Maintain health cards for the students and monthly doctors visit
4. Provide computers with furniture and support with one computer teacher
5. Provide educational aid and play materials for the children
6. Conduct classes to improve their English

7. Construction of toilets / Renovate unused toilets based on the need of the school and to employ a person to maintain the toilets.

8. Provide water supply to the school where it is needed.

9. Provide a staff to monitor the activities of the project in these schools.

10. Counselling and needed support to students to continue their studies and to bring back those who have already dropped out back to the schools.

The Government and the Donor have together agreed to implement the "ACTION PLAN". The Chief Educational Officer/District Elementary Educational Officer of the concerned District (including his successors in Office and assigns of) will be the Nodal officer for its implementation. The Nodal Officer shall approve the Action Plan and ensure the smooth functioning of all approvals. All civil structures built and all equipments provided by the donor will become part of the School property.

This Memorandum of Understanding will be valid for a period of 5 (five) years. After reviewing the results of the partnership and mutual consent, the MOU can be renewed for further period of two years at a time.

IN WITNESS WHEREOF the Parties hereto have here into set their hands and signed this MOU on the date, month and year mentioned above.

For TNF Inc. IN CHAPTER
TRUSTEE
TAMILNADU FOUNDATION, INC. 1974

DONOR

PLACE: Philadelphia USA
DATE: 30.5.2010

Pr. Secretary for School Education
For and on behalf of the
Government of Tamil Nadu.

Principal Secretary to Government
School Education Department
Secretariat, Chennai - 600 009.

Witness:

1. M. Rammohan

2.

Witness:

1.

2.

## Annexure (II)

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU BH 987398

12 MAR 2019 TAMILNADU FOUNDATION

R. LAKSHMANAN
STAMP VENDOR
L. C. No: 6/772/83
No: 261, E.V.R. ROAD,
AMINJIKARAI, CHENNAI-29

**MEMORANDUM OF UNDERSTANDING (MoU)**

This Memorandum of understanding for implementation of Tamil Nadu Foundation Academic Bridge Course Project is entered into on this .....08th day of ...March 2019

By and Between

**Tamil Nadu Foundation Inc. TN Chapter** (TNF) herein after, referred to **"TNF"** currently having its office at No: 27, Taylors Road, Kilpauk, Chennai – 600 010. (herein referred to as the **"First Party"**) represented by its Chairman, Thiru. S. Rajarethinam, I.A.S., (Retd) which expression shall include its successors in interest and representatives of the first party.

**AND**

The **Directorate of School Education**, represented by its Director **Dr. V. C. Rameswaramurugan** at DPI Campus, College Road, Chennai, TN – 600 006 (hereinafter referred to as the **second party**)which expression shall include its successors in interest and representatives of the second party.

For TNF INC. TN CHAPTER

Director of School Education
Chennai-600 006

Chairman

**Whereas:**

This MoU entered between the **First Party** and the **Second Party** on the terms and conditions detailed hereunder:

a. Tamil Nadu Foundation, Tamil Nadu Chapter a registered Charitable Trust since 1983 focusing on Education is functioning according to the Foreign Contribution Regulation Act (FCRA) 2010 and Rules and Income Tax (IT) Act 1982 and Regulations.

The **First Party (TNF)** involved in Education Enhancement Project namely Academic Bridge Course (ABC) that seeks to provide coaching for Academically Backward students, Improving Infrastructure facilities, Conducting awareness camps, Providing Digital classroom facilities, Conducting Soft Skills Training, College exposure visits and Job oriented Skill Development Training to students and such other relevant activities connected with the School Education System introduced by the Government.

b. The **Second party** is the Director of School Education under whose jurisdiction and control, the state government schools lie.

**NOW THIS MOU IS EXECUTED TO FACILITATE A JOINT INITIATIVE AS FOLLOWS:**

**I. Role of the first party:**

A. First Party identifies non achievers and conducts Academic Bridge Classes (ABC) to $6^{th}$ to $8^{th}$ class students in Government Schools selected in consultation with the Chief Educational Officer / District Educational Officer of the District concerned and also special coaching classes for class 10 students.

B. Based on partnership with donor organisations, the First Party will conduct its programmes in Government Schools with easy access to the students and teachers for conducting such programmes on a regular basis in the selected schools.

For TNF INC, TN CHAPTER

Chairman

Director of School Education
Chennai-600 006

C. Conducting Teachers Training Programmes at Tamil Nadu Foundation campus and / or at the Project School.

D. The First Party will also conduct Coaching classes, Awareness camps, Skill Development Programmes, College Exposure visits and other relevant activities for the benefit of the students.

E. Cost of the above mentioned programmes will be borne by the first party (Tamil Nadu Foundation), in **partnership with potential donors**. **The Programmes / Projects will be run for a specified period till funds are available for such programmes** In addition, specific programmes may be funded by Government of TN under its educational initiatives.

F. Continuance of the Project activities in the selected schools is subject to the funding support received from the Donors and also on the outcome of the impact assessment periodically done by the First Party.

**II. Role of Second Party:**

To enable the **First Party** to provide support to enhance education and training to the students and teachers of State-run Government Schools:

a. the **Second party** hereby agrees and acknowledges that the First Party as an education based NGO and to provide necessary permission to the first Party to run its programmes in the selected school premises.

b. the **Second party** shall provide necessary support by providing classroom space with utilities (Power, Water, Toilets etc.,) for conducting Academic Bridge Course (ABC), Digital Class rooms, Teachers Training Programmes and awareness programme in school premises.

c. The **Second party** shall intimate to the Educational authorities in their jurisdiction to enable the first party to conduct the programmes without delay and to give the maximum benefit to the students.

For TNF INC. TN CHAPTER

S. Rajendran

Chairman

Director of School Education
Chennai-600 006

**III. TERM AND TERMINATION:**

1. The duration of this MOU shall be for a term of five years (5) commencing with effect from the date of execution of this MOU. This MOU shall be automatically renewed unless and until specifically revoked in writing by either of the Parties, two (2) months before the expiry of the term agreed herein.

2. Either of the Parties may be entitled to terminate this MOU by giving two (2) months advance notice in writing to the other.

3. As the First Party is conducting several programmes funded by different donors for different tenures, programmes will be initiated and terminated based on the availability of the funds.

**IV. Teacher training program**

**In order to achieve the objectives:**

a) Second Party shall depute Govt. School teachers from Tamil Nadu over the next 5 years for a **4/5 days** per teacher training workshop. Subject to availability of funds/sponsorship and support from **potential donors**, it is envisaged that the programme will be scaled up over the years.

b) To ensure prompt and efficient program implementation **Second Party** shall draw up a list of Schools from each district for ABC Classes and students selected from 6th, 7th and 8th classes.

   i. Minimum of 30 students per teacher. Teachers with required qualification for coaching the students under Academic Bridge Course (ABC) Project will be selected by the Headmaster of the Project School and appointed by the PTA.

   ii. Students of class 10 be permitted to participate in the two days soft skill training conducted in their schools and also for exposure visits to higher Educational Institutions.

For TNF INC. TN CHAPTER

Chairman

Director of School Education
Chennai-600 006

c) The **Second Party** will designate a local official to coordinate with **First Party** and ensure successful implementation of the programmes.

d) The programs will be funded and managed as an independent activity by the **First Party** through designated personnel.

1) **First Party** will submit Annual progress reports to the **Second Party** on the performance of the students being coached at the school campus.

**V. Miscellaneous:**

a) This agreement is subject to force majeure clause.

b) **First Party** and **Second Party** will work together to ensure the success of the program. This may involve ongoing development or enhancements to increase the quality and reach of the program.

c) The success of this program will depend largely upon the cooperation and commitment of Government school teachers. First Party is confident that in the light of MOU, the Second Party will render all support to First Party to make these initiatives a huge success. The program is expected to positively impact students and enhance their creativity and involve themselves in learning process.

d) It is understood that the success and impact of educational programs like this one can be seen only over an extended period of time of few years and depends on the successful infusion of the program goals and pedagogy into the education system. First Party's role is to supplement the existing State Primary and Secondary Education system to upgrade its quality. The program does not intent to substitute the existing curricula or system in any way.

For TNF INC. TN CHAPTER

Chairman

Director of School Education
Chennai-600 006

e) This MOU shall be final and mutual understanding between the parties and any changes if any, to this MOU shall be made by an addendum in writing duly executed by both the parties.

f) This MOU shall be governed by the laws of the Republic of India and Hon'ble Courts at Chennai shall have exclusive jurisdiction.

For TNF INC. TN CHAPTER

Chairman

**Dr. V. C. Rameswaramurugan**
**Director**
The Directorate of School Education
Director of School Education
Chennai-600 006

**Mr. S. Rajarethinam, I.A.S., (Retd)**
**Chairman**
Tamil Nadu Foundation Inc. TN Chapter

## Annexure (III)

# மதிப்பெண் மதிப்பீடு விவர பட்டியல்

பள்ளியின் பெயர்: அரசு உயர்நிலைப்பள்ளி, .......................... தேர்வு மாதம்: ................

| | | | | எழுத்துத் தேர்வு மதிப்பெண் | | | | | | வாசிப்புத்திறன் தேர்வு மதிப்பெண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மாணவர் பெயர் | வகுப்பு | மாதம் | தமிழ் | தரநிலை | ஆங்கிலம் | தரநிலை | கணக்கு | தரநிலை | தமிழ் | தரநிலை | ஆங்கிலம் | தரநிலை | மொத்தம் | தரநிலை | மாணவர் பற்றிய குறிப்பு |
| 1. | பாபு | 6 | ஜுன் | 30 | A | 30 | A | 30 | A | 5 | A | 5 | A | 100 | A | Regular வகுப்பிற்கு செல்ல உரியவர் |
| 2. | குமார் | 6 | ஜுன் | 22 | B | 21 | B | 19 | B | 4 | B | 4 | B | 70 | B | நன்று |
| 3. | கமல் | 6 | ஜுன் | 30 | C | 15 | C | 25 | C | 3 | C | 3 | C | 69 | C | ஆங்கிலத்தில் முன்னேற்றம் வேண்டும் |
| 4. | சக்தி | 6 | ஜுன் | 9 | D | 7 | D | 8 | D | 2 | D | 2 | D | 34 | D | கவனம் செலுத்த வேண்டும் |
| 5. | அறிவு | 6 | ஜுன் | 3 | E | 2 | E | 5 | E | 1 | E | 1 | E | 18 | E | அதிக கவனம் செலுத்த வேண்டும் |

தேர்வு எழுதிய மாணவர்கள் எண்ணிக்கை : 5

**A** தரநிலை : 1

**B** தரநிலை : 1

**C** தரநிலை : 1

**D** தரநிலை : 1

**E** தரநிலை : 1

# Annexure (IV)

## STUDENT INFORMATION

### NAME OF THE SCHOOL

| | | |
|---|---|---|
| 1. | Name | : |
| 2. | Class | : |
| 3. | Date of Birth | : |
| 4. | Father's Name | : |
| 5. | Mother's Name | : |
| 6. | Occupation | : |
| 7. | Annual Income | : |
| 8. | Contact Number | : |
| 9. | Address | : |
| 10. | New Admission | : |
| 11. | Date of Joining | : |
| 12. | Medium of Instruction | : |
| 13. | Student Health Status | : |
| 14. | Reason of Slow Learners | : |
| 15. | Date Moving from TNF Class to Regular Class | : |
| 16. | Remarks | : |
| 17. | TNF- ABC Teacher Signature | : |
| 18. | Project Co-ordinator Signature | : |
| 19. | Head Master Signature | : |

மேற்கண்டவாறு மாணவர்களின் விவரங்களை முறையாகப்பெற்று மாணவர் பதிவேட்டில் பதிவிட வேண்டும். மேற்கண்ட விவரங்களில் வரிசை எண் 13-ல் குறிப்பிட்டுள்ளது போல் மாணவருக்கு ஏதேனும் உடல் நலன் சார்ந்த குறைபாடு இருந்தால் அவ்விவரத்தினை தமிழ்நாடு அறக்கட்டளை முதன்மைச் செயல் அலுவலர் **(CEO)** அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

குறிப்பு:- திட்ட ஒருங்கிணைப்பாளர், **TNF** அனுமதியின்றி யாருக்கும் உதவி செய்வதாக உறுதியளிக்கக்கூடாது.




**தமிழ்நாடு அறக்கட்டளை**
27, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்,
சென்னை—600 010.